www.padippakam.com

புதிய சமதர்மம்

පුදිය සමධර්මම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் : 37 ஜூன் 2001 விலை : ரூபா 10.00

போர் ஆயுதங்களினால், முதலாவது உலகப்போரில்பாதிக்கப்பட்ட மக்கள் தொகை 5% வீதம் ஆகும். இரண்டாவது உலகப்போரில் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை 50% வீதம். கொறிய யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை 60% வீதம். வியட்நாமிய யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை 70% வீதம்.


தமிழ் சங்கத்தில் நடைபெற்ற தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியக் கூட்டத்தில்

வி. ரி. தமிழ்மாறன்

சிரேஸ்ட்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம்.

# சொல்ஹெயிம் சோடை போனாரா?

இலங்கையில் தமிழ் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் இன்னும் தொடங்கவேயில்லை. ஆனால் பிரித்தானியாவிலுள்ள புகலிடம் நிராகரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கு உத்தேசித்துள்ளதாக பிரித்தானிய உள்துறை அமைச்சர் ஐக்ஸ்ட்றோ தெரிவித்துள்ளார். கடந்த 2 வருடங்களுக்கு மேலாக அனுசரணை முயற்சியில் நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வந்தமை தெரிந்ததே. நோர்வேயின் பிரதிநிதி எறிக் சொல்ஹெயிம் கொழும்பு, லண்டன், டில்லி நகர்களுக்கிடையில் சூறாவளிப்பயணம் செய்து பல சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.



அத்தோடு இரு தடவைகள் வன்னி சென்று தமிழ் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் தமிழ்ச்செல்வனுடனும் பேசியுள்ளார். நோர்வேயின் முயற்சிக்கு அமெரிக்கா அடங்கலான மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகள் ஆதரவளிப்பதாகக் கூறப்பட்டு வந்துள்ளது. எறிக் சொல்ஹெயிம் திடீரென அமெரிக்கா சென்று உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி. அவர்களும். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

இதனிடையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுனர் (மேஜர் ஜெனரல்) அசோகா ஜயவர்த்தன இருவரினதும் கூட்டுத்தலைமையில் யாழ்ப்பாணத்தில் பெரிய எடுப்பிலானதொரு "அதே இடத்தில் சேவை" யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றியதுடன். பெருவாரியான அன்றாடம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. சிங்கள படையினர் ஆக்கிரமித்து நிற்கும் மண்ணில் இயல்பு நிலை நிலவுவதாகக் காட்டும் முயற்சியாகவும் இது அமைகியதென்றால் அது மிகையல்ல. இந்த நிலையை பிரித்தானிய அரசாங்கம் கவனத்தில் எடுத்தே பிரித்தானியாவிலுள்ள தமிழர்களையும் திருப்பி அனுப்ப தீர்மானித்தது என்று எண்ணத் தோன்றுகிறது. யாழ் மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகளையும் அமைச்சர் டக்ளஸ் மேற்கொண்டுள்ளார்.

ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாகவே எறிக் சொல்ஹெயிம் செயற்படுகிறார் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அன்று சொல்ஹெயிமை மல்லாவியில் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்த தமிழ்ச்செல்வம் "கிளெமோர்" வெடிவிபத்தில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பினார். பலஸ்தீனர்களின் மண்ணை அபகரித்தது மட்டும்ல்லாமல் யசிர் அரபாத் மற்றும் முக்கிய தலைவர்களையே தீர்த்துக்கட்டும். குண்டுவீச்சு நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டிருப்பதற்கு இதற்கு அமெரிக்காவின் ஆதரவு இல்லையென்று எவரும் கூறமுடியாது. எனவே சொல்ஹெயிம் இங்கு உலாவித்திரிந்தது. தமிழ் தேசிய இன எழுச்சியை மழுங்கடிக்கவா? என்றே சந்தேகப்பட வேண்டியுள்ளது. ஏற்கனவே அமெரிக்க தூதுவர் அஸ்லி அல்ஸ் தமிழர்களுக்கு தனியான ஒரு பகுதி உண்டு என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றுள்ளார். இஸ்ரேல் பாலஸ்தீன சமாதான முயற்சியில் நோர்வேயே முக்கிய பங்கு ஆற்றியது. இன்று பாலஸ்தீன மக்கள் படும் துயரத்தைப் பார்த்தால் நோர்வேயின் முயற்சி எவ்வளவு தூரம் பலன் அளித்தது என்பதை புரிந்து கொள்ளலாம்.


## தமிழ் குடும்பத்துக்கு நெதர்லாந்து தஞ்சம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த கதிரன் பரராசசிங்கம் என்ற குடும்பத்தின் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால். அவர்களை ஜேர்மன் அரசு நாடு கடத்தியது. இக்குடும்பத்தினரை அம்ஸ்ரர்டாம் விமான நிலையத்தில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்தினரும். மனித உரிமை அமைப்புகளும் தடுத்து நிறுத்தினர்.

இவர்களின் ஆலோசனைக்கிணங்க. கதிரவன் பரராசசிங்கம் குடும்பம் அம்ஸ்ரர்டாம் விமான நிலையத்தில் வைத்து நெதர்லாந்து அரசுக்கு அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். இதனால். ஜேர்மன் பொலிசாருக்கும். நெதர்லாந்து பொலிசாருக்கும் இடையே சட்டப்பிரச்சினை உருவாகியது. இறுதியில் விண்ணப்பம் செய்திருந்த கதிரவன் பரராசசிங்கம் குடும்பத்தை நெதர்லாந்து பொலிசார் பொறுப்பேற்றனர். ஜேர்மன் பொலிசார் நாடு திரும்பினர். ஜேர்மனியில் நாடு கடத்தப்பட்ட குடும்பம் ஒன்று வேறு ஒரு நாட்டின் விமான நிலையத்தில் வைத்து அகதி விண்ணப்பம் செய்து அந்த நாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை இதுவே முதற் தடவையாகும்.

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதாலேயே மேற்படி குடும்பத்தைத் தடுத்து நிறுத்தினோம் என மனித உரிமைகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## கரு ஜயசூரியா, கருநாகமா?



ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் உண்மையான மகனாகவும் முதலாளித்துவத்தை மீட்சிப்பவருமாக, கருதப்படுவதன் எதிரொலியே ஐக்கிய தேசியக் கட்சியின் உள்வீட்டுச் சண்டை என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தமிழ் மக்களுக்கு ஏதோ ஒருவகையான சுயாட்சியை வழங்கி சந்திரிகாவிற்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்ற உலக முதலாளித்துவத்தின் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளமை ரணிலின் தலைமையை தூக்கி எறிய வேண்டுமென்ற மேலே கூறிய திட்டத்தைத் தீட்டியவர்கள்


(தொடர்ச்சி பக்கம் 12)

www.padippakam.com



# எமது பார்வையில் 5ம் குறுக்குத்தெரு

கொழும்பு மாநகரில் காலத்திற்குக் காலம் இன்க்கலவரம் நடைபெறும் போது, எரிந்த நிலையில், இடிந்த நிலையில், தமிழ் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்கள் காட்சி தருவது வழமையானதொரு நிலையாகும். 1983ல் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது, இலங்கை முழுவதும் தமிழ் வர்த்தக நிலையங்கள் எரித்து அழிக்கப்பட்டாலும், கொழும்பு மாநகரில் அதன் தாக்கம் அதிகமாகவே



இருந்தது. இனக் கலவரங்களை உருவாக்கும், இனவாதிகள் தமிழர்களின் வர்த்தக ஏகபோகத்தை சிதறடிக்கச் செய்வதும், அவர்களது நோக்கில் ஒன்றாக இருந்துள்ளது. இன்று கொழும்பு மாநகரிலும், தென் இலங்கையின் வேறு பகுதிகளிலும், தமிழர் வர்த்தகம் பல்வேறு வழிகளில் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரை அழகுபடுத்தும் நடவடிக்கையை மிகீத்தீவிரமாக மேற்கொண்ட அமைச்சர் மங்கள சமரவீரா முதலில் நடைபாதை வியாபாரிகள் மீது தனது பாய்ச்சலை மேற்கொண்டார். ஒரு சில கணப்பொழுதில் பல்லாயிரக்கணக்கான நடைபாதை வியாபாரிகள், நாடு முழுக்க நடுத்தெருவுக்கு விரட்டப்பட்டனர். நகர அபிவிருத்தி அதிகார சபையினர் நடைபாதை வியாபாரிகள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான நடவடிக்கையை ஒரு பகுதியினர் ஆதரித்தனர். மற்றொரு பகுதியினர், கண்டித்தனர். அரசியல் கட்சிகள் யாவும் மௌனம் சாதித்தது. புதிய இடதுசாரி முன்னணி மாத்திரமே நடைபாதை வியாபாரிகளுக்கு சார்பாக தனது கண்டனத்தை துண்டுப்பிரசுரம் மூலம், தெரிவித்திருந்தது.

புஞ்சி பொரளையில் உள்ள பௌத்த விகாரை கட்டிடம் சட்ட விரோதமானது என இடிக்கப்பட்டது. பின்பு பிரதம மந்திரி தலையிட்டு மீண்டும் அதே இடத்தில் மிக அழகான முறையில் மேற்படி விகாரை புதிய பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீரவும் கலந்து கொண்டார். தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கவனம் 5ம் குறுக்கு தெரு பக்கம் திரும்பியது. 50க்கும் மேற்பட்ட கடைத்தொகுதி கனரக இயந்திரங்கள் மூலம் இடித்து குவிக்கப்பட்டது. இடித்து குவிக்கப்பட்ட கடைகள் யாவும் தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களுக்கு உரியதாகும். 5ம் குறுக்குத்தெரு தவிர ஏனைய சில இடங்களிலும், நகர அபிவிருத்தி அதிகார சபை பல கட்டிடங்களை இடித்துத் தள்ளியுள்ளது. இவ் வர்த்தக நிலையங்களும், தமிழர் முஸ்லிம்களுக்கு சொந்தமானதாகும். கொழும்பு நகரில் மேலும் பல வர்த்தக நிலையங்கள் இடிக்கப்பட இருக்கின்றன.

கொழும்பு மாநகரில் தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்களே அதிகமாக உள்ளன. நகர அபிவிருத்தி அதிகார சபையின், தாக்குதலுக்கு இவர்களின் கட்டிடங்களே இரையாகப் போகின்றன. இது ஒரு விதத்தில் இனவாதிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் செய்கையாகும்.

உண்மையில் இலங்கை அரசு கொழும்பு மாநகரில் அவசரம் அவசரமாக நிலப்பரப்புகளை கண்டு பிடிப்பதிலும் வீதிகளை விஸ்தரிப்பதிலும் கவனமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் சர்வதேச கம்பனிகளுக்கு நிலத்தை விற்பதற்கும். கம்பனிக்காரர்கள், வீதியால் சுதந்திரமாக பயணம் செய்வதற்குமே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பு மாநகரை அழகுபடுத்தி அங்குள்ள வர்த்தகர்களுக்கு வசதி செய்ய இலங்கை அரசு முயல்கிறது என யாரும் நினைத்தால் அவர்கள் பரிதாபத்துக்கு உரியவர்களாவர்.

5ம் குறுக்குத்தெரு இன்று இடியுண்ட பகுதியாக காட்சி தருகிறது. 5ம் குறுக்குத்தெரு முகப்பில் இருக்கும் அரச மரமும், பௌத்த விகாரையும் இனவாதிகளின் பிரதான இடமாக இருக்கிறது. தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதிகள் செய்யும் அனைத்து நடவடிக்கைகளும், இவ் விகாரையில் இருந்தே ஆரம்பிக்கப்படுகிறது. தற்போது கடைகள் இடிக்கப்பட்டதால், மேற்படி விகாரைக்கு மிகப்பெரியதொரு நிலப்பிரதேசம் கிடைத்துள்ளதுபோல் தெரிகிறது. சாதாரணமாக இவ்விடத்தைப் பார்ப்பவர்கள் அப்படியே எண்ணுவார்கள். தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் இடிபட்டு மலைபோல் குவிந்து கிடக்க மறுகரையில் வெசாக் பந்தல் பலவர்ண வெளிச்சத்துடன், காட்சி தருகிறது.

வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால், தமிழ் மக்களின் வீடுகளும், வர்த்தக நிலையங்களும், இடிந்து போய், குவிந்து போய் கிடக்கின்றன. கொழும்பு மாநகரிலும், தமிழ் முஸ்லிம் கடைகள் இடிந்து போய்க் கிடக்கின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடவடிக்கையை கொழும்பு மாநகர சபை எதிர்க்கின்றது. இடிபட்ட கட்டிடங்களுக்கு கொழும்பு மாநகரசபை அனுமதி வழங்கியிருக்கிறது. பல லட்சம் செலவழித்து வர்த்தகத்தில் ஈடுபட்ட தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் ஒருசில நிமிடத்தில் ஒன்றுமில்லாத நிலையில் இருப்பது கவல்லயான விடயமாகும்.


# கூடன்குளம் அணு மின் நிலையத்தால் தமிழ் மக்களுக்கு அழிவா?

இந்திய தொலைக்காட்சியில் விசுவின் அரட்டை அரங்கத்தையும், கருணாநிதிக்கு நடைபெறும் விழாக்களையும் சினிமா குப்பைகளையும் மட்டுமே நாம் பார்க்கின்றோம். ஆனால் தொலைக்காட்சியில் வராத எத்தனையோ செய்திகள் எமக்குத் தெரிவதில்லை. தற்போது மக்களின் வாழ்வையும் சுற்றுப்புறத்தையும் நாசம் செய்யக்கூடிய அணுமின் நிலையம் ஒன்று தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடன் குளத்தில் நிறுவப்பட்டு வருகின்றது. இலங்கையில் புத்தளத்தில் உள்ள நுரைச்சோலையில், அனல் மின் நிலையம் அமைப்பதற்கு உள்ளூர் வாசிகள் கத்தோலிக்கத் திருச்சபையினர் மற்றும் பொது நிறுவனங்கள் காட்டிய எதிர்ப்பினால் மேற்படி திட்டம் இடை நிறுத்தப்பட்டது. இந்தியாவில் போபால் பிரதேசத்தில் ஏற்பட்ட விசவாய்வுக் கசிவினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைந்தனர். இன்றும் அதன் தாக்கம் இம் மக்களை வாட்டுகிறது.

மிகப் பாதுகாப்பான முறையில் தான் கூடன்குளத்தில் அணுமின் நிலையம் ருஷ்யாவின் உதவியுடன் நிறுவப்படுகிறது என சம்பந்தப்பட்டவர்கள் கூறினாலும், மேற்படி அணு மின் நிலையம் மீது விபத்து ஏதும் நடந்தால், அதன் தாக்கம் சுற்றுப்புறச்சூழலை நிச்சயம் பாதிக்கும் என்றே கூறப்படுகிறது.

இதைத் தவிர மன்னார் குடாவில் உள்ள கடல் வளத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் இந்திய சுற்றுப்புறச் சூழல், காட்டு இலாகா விஞ்ஞானிகள் மட்டத்தில் நிலவுகின்றது.

தமிழ் நாட்டின் கல்பாக்கம் அனல் மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் கடலுக்குள்ளே பாய்ச்சப்படுகிறது. இதனால் கடல் நீரின் வெப்பமட்டம் உயர்வடைந்து உள்ளது. இங்கு இறந்த மீன்களையே மீன்பிடித் தொழிலாளர்கள் பிடிப்பதாகத் தெரிய வருகிறது. கல்பாக்கம் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மேற்படி மின் நிலையத்தால் பல்வேறு வழிகளில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்




யுத்தத்தினால் வடக்கு கிழக்கு பகுதிகள் சின்னாபின்னம் ஆகி உள்ளது. இதனால் இப்பகுதிகளில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படக்கூடிய அபாயநிலை பற்றி கண்காணிப்பதற்கு எந்த பொது நிறுவனங்களும் இல்லாத நிலையே காணப்படுகிறது.

தமிழ் நாட்டில் இரட்டை இலை வென்று விட்டது. இரஜனிகாந் ரசிகர் மன்றம் சீற்றம் என்றெல்லாம், மக்களின் மனதை திசை திருப்பும் செய்திகளே வெளியிடப்படுகிறது. உலகில் வளர்ச்சி பெற்ற ஏகாதிபத்திய நாடுகளின், கழிவுகளை அகற்றுவதற்கு மூன்றாம் மண்டல நாடுகளை அவை தேடித்திரிகின்றன.

கூடன்குளத்தில் நிறுவப்படும் அணுமின் நிலையத்தில் இலங்கையின் வடபகுதிக்கும், நாசம் விளையலாம். இது பற்றி மனிதர்களை நேசிப்பவர்கள் இயற்கையை நேசிப்பவர்கள், உயிரினங்களை நேசிப்பவர்கள் விசேட கவனம் எடுக்கவேண்டும்.

# ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஏப்ரலில் மட்டும் ஈராக்கில் 9 ஆயிரம் பேரை கொன்றுள்ளதா?

குவைத் மீது ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு முயற்சிக்காக. ஈராக் மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடையை விதித்தது. இப் பொருளாதார தடை காரணமாக ஈராக்கில் கடந்த ஏப்ரல் மாதத்தில் மட்டும் 9 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். இவர்களில் 5,696 குழந்தைகள் போசாக்கின்மையே இவர்களது மரணத்திற்கு காரணமாகும். பொருளாதாரத் தடை அமுலுக்கு வருவதற்கு முன்பு இக் காலப்பகுதியில் 347 பேர் மட்டுமே இங்ஙனம் இறந்தவர்களாவர். இதேபோல இதயநோய். நீரழிவு என்பவற்றின் காரணமாக 3101 ஈராக்கியர் மரணமடைந்துள்ளனர். இதேகாலப்பகுதியில் இந்நோயால் பொருளாதாரத்தடைக்கு முன்பு மரணமடைந்தவர்கள் 457 ஆக உள்ளது. 1990 ல் கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடையின் காரணமாக ஈராக்கில் 1489959 ஈராக்கியர்கள் மரணமடைந்துள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# தீச்சுவாலை 1 இன் தோல்வி உலகத்திற்கு உணர்த்திய உண்மைகள்

பொதுஜன முன்னணியின் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளுக்கு தீச்சுவாலை 1இன் தோல்வி, பலத்த பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 4 மாதங்களாக விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியிருந்த யுத்த நிறுத்த அறிவிப்பு சம்பந்தமாக பலரும், பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். பொதுவாக ஜனநாயகத்தை விரும்பும். சக்திகள் அனைத்தும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அறிவிப்பை நல்லதொரு சமிஞ்சையாகவே கருதினர். இத்தகைய போர் பெரும்பாலும் இடதுசாரி சக்திகள், மத அமைப்புக்கள், தொண்டர் நிறுவனங்கள் சாதாரண சிங்கள மக்கள், இவற்றுடன் பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றில் உள்ள சிலர் இதை வரவேற்றிருந்தனர். ஆனால், பிரதமர் உள்ளிட்ட இனவாத முகாமில் உள்ள அனைத்து தரப்பினரும், எள்ளி நகையாடினர். இதற்கு அவர்கள், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், பலவீனம் அடைந்துள்ளனர். ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் வெறுக்கத் தொடங்கியுள்ளனர் என எக்காளமிட்டனர். யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தாலே நாட்டில் அமைதி பிறக்கும் என அடம் பிடித்தனர்.

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள், யுத்த நிறுத்தம் செய்திருந்த நான்கு மாத காலப் பகுதிகளில் இலங்கை அரசு, பல்வேறுபட்ட போர் தளபாடங்களை வாங்கிக் குவித்த வண்ணமே இருந்தது. ஆனையிறவு படை முகாம், புலிகளின் கைக்குள் சென்றதன் பின். போர் தளபாடங்களை இறக்குவதில் அரசு அதிக கவனம் செலுத்தியது. இதற்கென பெருமளவு நிதியும் ஒதுக்கப்பட்டது. எனவே தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகப்பெரியதொரு யுத்தத்திற்கு இலங்கை அரசு நீண்ட நாட்களாக தன்னை ஆயத்தப்படுத்தியே வந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் 24ம் திகதி விடுதலைப் புலிகள் தமது யுத்த நிறுத்த அறிவிப்பை முடிவுக்குக் கொண்டு வந்தவுடன், புலிகள் மீது பாய்வதற்கு இலங்கை அரச படைகள் தயார் நிலையில் இருந்துள்ளன. பொதுவாகவே விடுதலைப் புலிகள், இம்முறை போன்று நீண்டதொரு யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டதில்லை. சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசின் அம்மண நிலையை வெளிக்காட்டுவதற்கு விடுதலைப் புலிகள் தமது யுத்த நிறுத்த அறிவிப்பை நீட்டியிருக்கலாம். ஆனால் இலங்கை அரசோ, விடுதலைப் புலிகள் பற்றி தவறான கணிப்பீட்டையே கொண்டிருந்துள்ளது. புலிகள் பலவீனமான நிலையில் உள்ளனர். இவர்கள் மீது திடீரென எமது பலம் முழுவதையும் பாவித்து தாக்கினால், பளை பகுதியில் இருந்து அவர்களை விரட்டிவிடலாம். பின்பு பளையில் இருந்து கொண்டு ஆனையிறவு பகுதியை பிடித்து விடலாம் என மனப்பால் குடித்தனர்.

தீச்சுவாலை ஒன்று நடவடிக்கையானது, யாழ் படைத்தளபதி அன்ரன் விஜேந்திராவால் மேற் கொள்ளப்பட்ட ஒன்றல்ல. இராணுவ தலைமைகளின் கூட்டு முடிவாக, பல்வேறுபட்ட முன் ஏற்பாடுகளுடன் தொடங்கப்பட்ட போர் முயற்சியாகும். எனவே விடுதலைப் புலிகள் தமது யுத்த நிறுத்தத்தை 24ம் திகதி முடிவுக்குக் கொண்டுவர 25ம் திகதி அதிகாலை சகல ஆயுதங்களுடன் இலங்கைப் படை விடுதலைப் புலிகள் மீது போரைத் தொடங்கியது. போர் தொடங்கியவுடன் தமக்கு பலத்த வெற்றி ஏற்படப் போகிறது என எண்ணி முன்னேறிய படையினர், விடுதலைப் புலிகளின், நிதானமான, உறுதியான தாக்குதல்களினால், மிகப் பெரிய சேதத்தை சந்தித்தனர். பிரதி பாதுகாப்பு அமைச்சர் மே 10ம் மிகதி பாராளுமன்றத்தில் நடந்த அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில், பேசும் போது தீச்சுவாலை 1 நடவடிக்கையில் உத்தியோகத்தர் ஐந்து பேர் ஏனைய பதவியினர் 162 பேர் உயிர் நீத்தனர் என்றும், 1905 பேர் காயம் அடைந்தனர் என்றும், 88 போர் காணாமல் போய் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் இதைவிட இழப்புக்கள் அதிகம் என்றே பலரதும் கருத்தாகும். பலத்த இழப்புக்களுடன் தீச்சுவாலை 1 நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது உள்ள கேள்வி என்னவென்றால், இலங்கை இராணுவத்தின் கருத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் இருக்கின்றார்கள், இதனால் தான் போர் நிறுத்தம் செய்ய முனைந்தனர் என்ற நிலைப்பாட்டிற்கு என்ன நடந்தது.



**விடுதலைப் புலிகள். பயங்கரவாதிகள். சமாதானத்தின் எதிரிகள். பேச்சுவார்த்—தைக்கு வரமாட்டார்கள். என அல்லும்பகலும் பிதற்றித் திரிந்த இலங்கை அரசின். பிரச்சாரம் இன்று புஸ்வானம் ஆகி விட்டது. விடுதலைப் புலிகளின் பலத்தையும். அதற்கு இருக்கும் சக்தியையும் கண்டு உலகம் பிரமிக்கிறது.**

மிகப் பலவீனமான நிலையில் இருந்து கொண்டு விடுதலைப் புலிகளால் இத்தகைய வெற்றிகரத்தாக்குதல் நடத்த முடியுமா? என்பதாகும்.

இன்று விடுதலைப் புலிகள் மிகப் பலம் வாய்ந்த சக்தி என்பதை உலகிற்கு புரிய வைத்துள்ளனர். இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அவர்கள் பலமான நிலையிலேயே உள்ளனர். கடந்த 4 மாத யுத்த நிறுத்தத்தின் போது, இவர்களின் நிலையை தமிழ் மக்களின் அனைத்து தரப்பினரும் வரவேற்று இருந்தனர். தமிழ் மக்கள் இன்று விடுதலைப் புலிகளை தமக்கு விடுதலை பெற்று தருவார்கள் என முழுமனதோடு நம்புகின்றனர். தமிழ் மக்களின் எண்ணற்ற பேராதரவே இன்று புலிகளை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது.

**இன்று விடுதலைப் புலிகள் மிகப் பலம் வாய்ந்த சக்தி என்பதை உலகிற்கு புரிய வைத்துள்ளனர். இராணுவ ரீதியாகவும். அரசியல் ரீதியாகவும் அவர்கள் பலமான நிலையிலேயே உள்ளனர். கடந்த 4 மாத யுத்த நிறுத்தத்தின் போது. இவர்களின் நிலையை தமிழ் மக்களின் அனைத்து தரப்பினரும் வரவேற்று இருந்தனர். தமிழ் மக்கள் இன்று விடுதலைப் புலிகளை தமக்கு விடுதலை பெற்று தருவார்கள் என முழுமனதோடு நம்புகின்றனர். தமிழ் மக்களின் எண்ணற்ற பேராதரவே இன்று விடுதலைப் புலிகளை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது.**



விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள், சமாதானத்தின் எதிரிகள், பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள், என அல்லும்பகலும் பிதற்றித் திரிந்த இலங்கை அரசின், பிரச்சாரம் இன்று புஸ்வானம் ஆகி விட்டது. விடுதலைப் புலிகளின் பலத்தையும், அதற்கு இருக்கும் மக்கள் சக்தியையும் கண்டு உலகம் பிரமிக்கிறது. இதனால் தான் சந்திரிகா அரசை பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு என்றுமில்லாதவாறு சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்றது.

உலகில் உள்ள பல விடுதலை அமைப்புகள் இன்று விடுதலைப் புலிகளோடு தொடர்பு கொள்ளத் துடிக்கும் நிலை உருவாகி உள்ளது. இதனால் ஆட்சிப்பரப்பில் இருப்பவர்களுக்கு பெரும் அச்சமும் தோன்றியுள்ளது. எமக்கு ஆயுத உதவி தாருங்கள், எமக்கு நிதி உதவி அளியுங்கள், இலங்கையின் ஒரு பகுதியில் இருக்கும் இந்த பயங்கரவாத குழுவை அழித்து விடுகிறோம் என பறைசாற்றி வந்த இலங்கை அரசின் குரலுக்கு எதிர்காலத்தில் சர்வதேச மட்டத்தில் மதிப்பு இல்லாமலே போகும். விடுதலைப் புலிகளை யுத்தத்தில் வெல்ல முடியாது என்பது, ஆட்சியில் உள்ளவர்களுக்கு தெளிவாகவே புரியத் தொடங்கியுள்ளது. யுத்தத்தை நீடித்தால் தென் இலங்கை முழுவதும் பங்கர் அமைக்க வேண்டிய தேவை ஏற்படலாம் என அண்மையில், கலாநிதி விக்கிரமபாகு ஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். இன்று தென் இலங்கை முழுவதும், கொலை கலாச்சாரம் கொடி கட்டி பறக்கின்றது. யுத்தத்தின் மூலம் கொள்ளை லாபம் ஈட்டும் ஒரு சிலரின் விருப்பத்திற்காக யுத்தத்தை தொடர்ந்து நடத்தக்கூடிய நிலையில் இலங்கை அரசு இருக்குமா என்பது சந்தேகமே? இலங்கை அரசின் யுத்த நடவடிக்கையை தொடர்ந்து சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் என்பதும் சந்தேகமே. விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்தால் அவர்களுக்கு எதை வைத்து பேச்சு வார்த்தையை இலங்கை அரசு நடத்தப் போகிறது. இதுவே இன்றுள்ள கேள்வியாகும்.

தீச்சுவாலை ஒன்றில் தோல்வியை தழுவி இருக்கும் இலங்கை இராணுவம் எதிர் காலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எப்படிச் சமாளிக்கப் போகிறது. ஏற்கனவே இராணுவத்திற்கு ஆள் பற்றாக்குறை நிலவுகின்றது. தீச்சுவாலை ஒன்றின் தோல்வியால், இராணுவத்தில் இருந்து வெளியேறுவதற்கே பலர் விரும்புவர். இராணுவத்தில் சேர்வதற்கு எவரும் விரும்ப மாட்டார்கள். இதனால் இலங்கை இராணுவத்திற்கு மிகப் பெரிய அளவில் ஆள் பற்றாக்குறை நிலவப் போகின்றது.

உலகிலே மிகப் பெரியதொரு விடுதலை அமைப்பாக விடுதலைப் புலிகள் இன்று இடம் பெறுகின்றனர். இலங்கை அரசு போட்ட அனைத்து தடைகளையும் தாண்டியவர்களாக உள்ளனர். உள்நாட்டு குழப்பங்களாலும், இனவாதிகளின் அட்டகாசத்திலும், கதி கலங்கிப் போய் இருக்கும் இலங்கை அரசுக்கு விடுதலைப் புலிகளை போரில் வெல்வது என்பது இயலாத காரியமாகவே இருக்கும். போர் தளபாட இறக்குமதியில் ஊழல் இடம் பெற்றது அம்பலத்துக்கு வந்துள்ளது. தொடர்ந்து யுத்தம் நடைபெற்று வருவதால், இதன் மூலம் இலாபம் அடையும் புதிய கூட்டம் ஒன்று இன்று உருவாகி உள்ளது. இவர்களே சமாதானத்திற்கு எதிராக உள்ளனர். இவர்களை ஓரங்கட்டுவது என்பது இயலாத காரியமாகவே இருக்கும். ஏனென்றால் ஆட்சிப் பரப்பில் உள்ளவர்களின் நெருக்கமானவர்களே இதில் ஈடுபட்டு வரலாம். அவர்களை களை எடுப்பது என்பது முடியாத காரியமே.

தீச்சுவாலை 1 தோல்வி பல்வேறுபட்ட சங்கடங்களை இலங்கை அரசுக்கு தோற்றுவித்துள்ளது. தோல்வியைப் பொறுக்க முடியாத இனவாத சக்திகள், இன்று முஸ்லீம் மக்கள் மீது தமது ஆத்திரத்தை காட்ட முயல்கின்றன. மாவனல்லையில் இவர்கள் பெரும் அழிவை ஏற்படுத்தி இருக்கின்றனர். யுத்த முனையில் தோல்வி ஏற்படும் போது, தேசிய இனங்கள் மீது, தமது ஆத்திரத்தைக் காட்டுவதற்கு இனவாத சக்திகள் முயல்கின்றன. இத்தகைய போக்கை எவ்வளவு காலம் பொதுஜன முன்னணியால் அனுமதிக்க முடியும். இன்று பொதுஜன முன்னணியின் ஆட்சி கதிரைக்கே சவால்கள் வரத் தொடங்கியுள்ளன. இதில் இருந்து பொதுஜன முன்னணி தப்பி பிழைக்குமா என்பது சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கின்றது. தப்பிப் பிழைத்தாலும், எவ்வளவு காலத்திற்கு நின்று பிடிக்கும் என்பதும் சந்தேகமே. எனவே தீச்சுவாலை 1 இன்று தென் இலங்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணியாக அமைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# மாவனல்ல சம்பவங்களும் முஸ்லிம்கள் தெரிவு செய்ய வேண்டிய பாதையும்

அண்மையில் மாவனல்ல முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கும், பலத்த உடைமை அழிப்புகளுக்கும் அமைச்சர் மகிபால ஹேரத் தான் பொறுப்பு என பரவலாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தான் சம்பவ தினங்களில் வெளிநாடு சென்றிருந்தபடியால் தன் மீது குற்றம் சுமத்துவது தவறு என அமைச்சர் ஹேரத் பின்னர் விளக்கியிருந்தார். அவர் சம்பவங்களில் நேரடியாக ஈடுபட்டிருக்காத படியால் தான் இலகுவாகத் தப்பித்துக் கொள்ளலாம் என அவர் எண்ணியுள்ளார். முழுப்பூசணிக்காணைச் சோற்றினில் புதைக்க முடியாது என்பதை அமைச்சர் ஹேரத்தோ சந்திரிகா அரசாங்கமோ உணரவில்லை என்பதையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான ஏறத்தாழ 250 உடைமைகள் சாம்பலாக்கப்பட்டன. இவற்றில் வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அடங்கும். அத்தோடு பள்ளிவாசல்களும் எரிக்கப்பட்டன. ஏற்பட்ட சேதம் ருபா 450 மில்லியனளவாக இருக்குமென அறியக்கிடக்கிறது. இத்தனை அழிவுகளையும் பார்த்துக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் வாழாவிருப்பார்களா? இவ் அட்டூழியங்களை பொலிசாரின் ஆதரவுடனும் அனுசரணையுடனும் தான் நிறைவேற்றப்பட்டன என்பது உலகறிந்த உண்மை. அவர்கள் இவற்றை எதிர்த்துக் கொதித்துக் கோசமெழுப்பினர். அப்போதுதான் பொலிசார் சுறுசுறுப்படைந்தனர். துப்பாக்கி வேட்டினால் ஒரு இஸ்லாமியரைத் தீர்த்துக் கட்டினர். பலரைக் காயப்படுத்தினர்.

சந்திரிகா அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அடாவடித்தனங்களில் அப்பட்டமாக ஈடுபட்டவர்களுக்கே அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளது. கடந்த பொதுத் தேர்தல் கால முறைகேடுகள் பற்றி பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளரும் விவசாய அமைச்சருமான டி. எம். ஜயரத்ன பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகாவிடம் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். ரத்வத்தைக்கு அமைச்சர் பதவி வழங்கப்படாது என்ற எண்ணம் கூட நாட்டில் நிலவியிருந்தது. ஆனால் அவர் அதே பதவிக்கு காலம் தாழ்த்திய பின்னர் நியமிக்கப்பட்டு தெரிந்ததே. இன்று மாவனல்லைச் சம்பவம் தொடர்பாக அமைச்சர் மகிபால ஹேரத்துக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த லட்சணத்தில் நாட்டில் அராஜகம் தலை விரித்தாடுவதை விட வேறென்ன நடக்க முடியும்?

மறுபுறத்தில் மாவனல்ல சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதானையில் நடத்தப்பட்ட போராட்டம், தவறானது, இனமோதல்களுக்கு இட்டுச் செல்லக்கூடியது அது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என ஸ்ரீ. ல. சு. க. வைச் சேர்ந்த முஸ்லிம் அமைச்சர்கள் பிரதானிகளே கூறியிருக்கின்றனர். அதாவது சிங்கள பேரினவாத சக்திகளும் தடைச் சட்டங்களும் அடாவடித்தனங்கள் செய்தால் அதனைத் தட்டிக் கேட்க உரிமையில்லை என்ற பாணியில் அரசாங்கம் செயற்படுவது ஒருபுறமிருக்க சில முஸ்லிம் அமைச்சர்கள் நடந்தது நடந்து முடிந்து விட்டது, அதையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுமளவுக்கு பதவிமோகமும் அடிமைத்தனமும் அவர்களை ஆட்கொண்டு விட்டதையே காட்டுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை மருதானையில் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு மாசு கற்பித்து அதைக் கொண்டு மாவனல்லையில் இடம் பெற்ற முஸ்லிம் விரோத பிரளயத்தை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த பிரயத்தனத்திற்கு முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் துணைபோயுள்ளனர்.



அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ் அரசாங்கத்திற்கு 100 நாள் அவகாசம் கொடுத்தே பதவியேற்றிருந்தார். தேர்தல் ஆணைக்குழு. பொலிஸ் ஆணைக்குழு நியமித்தல் போன்ற சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றே அந்த நாள் அவகாசம் வழங்கப்பட்டது. அது நிறைவேற்றப்படவில்லையாயினும் ரவூப் ஹக்கீம் பதவியை தொடர்ந்து அலங்கரிக்கிறார்.

மறுபுறத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் சர்வதேச வர்த்தக மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் மாவனல்ல சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்குச் சவால் விட்டு, பதவியைத் துறந்து வெளியேறவும் தயங்கப் போவதில்லையென காரசாரமாகப் பேசியுள்ளார். இது தொடர்பாக அவர் "சன்டே லீடர்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கீழே தரப்பட்டிருக்கும் விடயங்களையும் தெரிவித்துள்ளார்.

1. ஏற்கனவே திட்டமிட்ட அடிப்படையில் பொலிசாரின் ஆதரவு அனுசரணை மற்றும் உதாசீனம் காரணமாக இடம்பெற்ற மாவனல்லைச் சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.
2. இது முஸ்லிம்களின் பொருளாதாரத்தைச் சீரழிப்பதற்கு மிகக் கவனமாகத் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்ட கைங்கரியமாகும்.
3. தனிப்பட்டவர்களை (பொலிசார்) தண்டிப்பதனால் அத்தகைய பிரச்சினைகள் நீங்கப் போவதில்லை. இவற்றுக்கான அடிப்படைக் காரணிகள் அகற்றப்பட வேண்டும்.
4. சிறுபான்மையின மக்கள் சிங்கள பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லையென்ற (இனவாத) பிரசாரமும் சில சக்திகளினால் முடுக்கி விடப்பட்டுள்ளது. இத்தகைய சக்திகள் தான் பிந்துனுவெவ படுகொலைச் சம்பவங்களுக்குப் பின்னாலும் இருந்தனர்.
5. ஜனாதிபதி அடையாளமாக சில நடவடிக்கைகள் மேற்கொண்டதை விட சம்பவம் நடந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டிருக்க வேண்டும்.
6. அமைச்சர்கள் பௌசியும், அலவி மௌலானாவும் எனக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியிருந்தார்களென்றால், அவர்களுக்கு கருத்துச் சுதந்திரம் இருப்பது போலவே எனக்கும் உண்டு. நான் அரசாங்கத்தின் எடுபிடியாக இருக்க விரும்பவில்லை. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியாக வேண்டும் அல்லது எனது நம்பகத்தன்மை பாதிக்கப்படும். ஆனால் அவர்கள் தான் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதற்கு நான் அவர்களுக்கு நன்றியுடையவனாயிருக்கிறேன்.
7. 1994 முதல் பொலிஸ் சேவையில் பதவி உயர்வுகளில் பாரபட்சங்கள் நிலவியுள்ளன. பொலிஸ் சேவையில் எத்தனையோ பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருக்கின்றனர். ஆனால் ஒரு முஸ்லிம் கூட அத்தகைய உயர் பதவிக்கு நியமிக்கப்படவில்லை. நான் மந்திரி சபையில் பிரவேசித்த காலம் முதல் ஜனாதிபதியிடம் இது பற்றிக் கூறியுள்ளேன். ஆனால் எதுவுமே நடக்கவில்லை.
8. அமைச்சர் என்ற வகையில் ஆத்திரமூட்டும் பத்திரிகை அறிக்கைகளை விடுவதைத் தவிர்த்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறாரென்றால், நான் கூறிவைக்க விரும்புவது இதுதான். அதாவது, எனக்கு கருத்துச் சுதந்திரம் உண்டு. நான் மந்திரிசபையில் ஒரு எடுபிடியாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. அப்படி அவர் என்னை எதிர்பார்த்தால் மிக்க நன்றி, அவ்வாறு என்னால் இருக்க முடியாது என்று சொல்வேன்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் இப்படியெல்லாம் தீவிரமாகப் பேசுவதைக்கண்டு எவரும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

காலஞ்சென்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமாயிருந்தவராகிய எம். எச். எம். அஷ்ரப்பும் இப்படியெல்லாம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பல தடவைகள் சினம் கொண்டிருந்தார். பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனான உறவினை முறித்துக் கொள்ளப்போவதாக அச்சுறுத்தியுமிருந்தார். ஆனால் அப்படியேதும் நடந்ததில்லை. அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ் அரசாங்கத்திற்கு 100 நாள் அவகாசம் கொடுத்தே பதவியேற்றிருந்தார். ஐ. தே. க. முன்வைத்திருந்த தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு நியமித்தல் போன்ற சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றே அந்த நாள் அவகாசம் வழங்கப்பட்டது. அது நிறைவேற்றப்படவில்லையாயினும் ரவூப் ஹக்கீம் பதவியை தொடர்ந்து அலங்கரிக்கிறார்.

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் இவ்வாறு காலம் காலமாக செயற்பட்டு, சிங்கள பேரினவாதத்தால் வகையாக ஏமாற்றப்பட்டது தான் மிச்சம்.

இந்த நாட்டில் தமிழ் முஸ்லிம் மக்களைப் போலவே சிங்கள தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் அடக்கியொடுக்கப்பட்டு வருகின்றனர். பட்டம் பதவிகளுக்காக மற்றும் சுகபோகங்களுக்காக சிங்கள பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு முண்டு கொடுப்பதாக, அடக்கியொடுக்கப்படும் மக்களோடு இணைந்து போராடி அத்தகைய அரசாங்கங்களை ஆட்டிப்படைப்பதா, சரியான பாதை என்பதையே தெரிவு செய்ய வேண்டும்.

-வ. திருநாவுக்கரசு.

## இகழ்ச்சி

—கவிஞர் ஏ. இக்பால்

முன்பெலாம் வர்க்கமே பேசி
முதலாளி தொழிலாளி சமத்துவமுடைய
ஒரு பேரரசைக் கண்டனர்!
மேலாதிக்கம் செலுத்துவோர் கூடி
சாதிப்பிரிவை மிகச் சுலபமாக்கினர்!

ஆளும் சாதியை அகற்றிவிட் டுயர
வளர்த்த கடாக்கள் மார்பில் குத்தின!
"லெபனான்" போல நம் நாடானது
துவக்குத் தூக்கிகள் சாதிமான்களைத்
தலைதெறிக்கத் தலைநகர்க்கு ஓடவைத்தனர்!

பேரினவாதம் பேசிய தமிழர்
முஸ்லிம்களை வாழ்விடம் விட்டுத்துரத்தினர்!
முஸ்லிம்களிடம் தமிழை விட்டுவிட்டு
ஒரு சாரார் புகலிடம் நோக்கிப் புறப்பட்டனர்!

முஸ்லிம்மீது தமிழர் பேரின வாதம்புரிய
தமிழர்மீது சிங்களவர் பேரினவாதம் ஆரம்பமானது!
மூன்று இனங்கள் முறையாய் வாழ்வதால்
இரண்டினங்களை மூட்டிவிடுதல் மிகச்சுலபம்!

இப்படி இயல்புகள் மாறியதாலே
இன்று நம்மிலங்கை எதியோப்பியாவாய்
மாறிவருவதை மனதில் கொள்வோம்!
நமது வளர்ச்சி மிகத்துரித இகழ்ச்சி!

படிப்பகம்

உலக மயமாக்கல் நடவடிக்கையை உலக வர்த்தக அமைப்பு உலக வங்கியின் மூலம் செயல்படுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்தபோது, அரசாங்கம் எதுவித வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபடக்கூடாது. அது தனியார் துறையிடம் அதைக் கையளிக்க வேண்டும். வர்த்தகத் துறையை தாராளமயமாக்க வேண்டும் என வலியுறுத்தியது. அதன்மூலம் அன்னிய முதலீடுகள், திறமைமிக்க முகாமைத்துடன் கிடைக்கும். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று கூறப்பட்டது.

அரசாங்கம் இந்நாட்டிற்கு பெரும் அன்னிய செலாவணியை ஈட்டித்தந்த பெருந்தோட்டத் துறையை தனியார் மயமாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதை இடதுசாரி முற்போக்குத் தோட்டத் தொழிற்சங்கங்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் நகர்ப்புற தொழிற்சங்கங்கள் அந்த அளவு ஆதரவை வழங்கவில்லை. காலஞ்சென்ற அமைச்சர் தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர்.

வெளியிடுவார்களா என்ற கேள்வி எழுப்பினால் நிச்சயமாக இல்லை என்றே கூறலாம். இந்தியா போன்று சட்டங்களல்ல. இலங்கையில் இச்சட்டங்கள் வசதி படைத்தவர்களுக்கும் அதிகாரத்திலிருப்பவர்களுக்கும் ஏற்ற வகையில் வளைந்து கொடுக்கும்.

இந்தக் காரணங்களினால் ஆட்சியதிகாரத்திலிருந்து கொண்டு பதவியைப் பற்றிப்பிடித்துள்ள தொழிற்சங்கத் தலைமைகள் நாளுக்கு நாள் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் குறைவதையும், இதனால் அமைதியின்மை வளருவதையும் கவனமாக அவதானித்தனர். எந்த நேரத்திலும் இந்தக் குண்டு வெடிக்கலாம், அது தங்களையும் மீறிச் செல்லும் என்பதை விளங்கியிருந்தனர். இதைத் தற்காலிகமாகவேனும் தணிக்கும் முயற்சியிலீடுபட்டனர்.

இனவாத முதலாளித்துவ அரசாங்கம் யுத்தம் செய்து வெற்றியடைந்து அதைப் பயன்படுத்தி சாதாரண சிங்கள மக்களுக்குள்ள இன உணர்வைப் பயன்படுத்தி யாப்பா பட்டுனாவை வெற்றி கண்டோம்



அவ்வப்போது ஏதாவது கொடுப்பனவுகளை அறிவித்தனர். ஆனால் தனியார் துறையினருக்கு கொடுக்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்தாலும் அது முழுமையாகக் கொடுக்கப்படுவதில்லை. அதுவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சுத்தமாகக் கிடைப்பதே இல்லை. இதனால் மலையகத்தின் தொழிற்சங்கத் தலைமைகள் தமது பட்டம் பதவிகளை காப்பாற்றிக் கொள்வதற்கான வழி-

அமைச்சர்களான இந்திக்க குணவர்த்தன, பெட்டி வீரக்கோன் போன்றவர்கள் தோட்டக் கம்பனிகள் கொள்ளை லாபம் அடிக்கின்றனர் என்று மேடைகளில் முழங்கினாலும் அமைச்சரவையிலிருந்து என்ன செய்கிறார்கள் என்று கூறவில்லை. ஆனால் போராட்ட போட்ட முடிவில் இ. தொ. கா. விற்கு இன்னுமொரு அரச அமைச்சர் பதவிக்கு உறுதி வழங்கப்பட்டது. அந்த அளவு தூர நோக்குடன் தலைவர் செயல்பட்டுள்ளார் என்பது மட்டும் தெளிவாகிறது.

இந்தப் போராட்டத்தில் முன்னை நாள் பொதுச் செயலாளரான செல்லச்சாமியும் கலந்து கொண்டார். தொடர்ந்து இந்த சக்திகளனைத்தும் மே தினத்தில் ஒன்றாக மேடையில் தோன்றினர். யூ. என். பி. வெல்லுமென நினைத்து அவர் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்த மலையகத் தலைவர், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தாலும் இந்தப் போராட்டத்தில் ஐக்கியமாகச் செயல்பட்டார். நீதிமன்றம் சென்ற முன்னைய பொதுச்செயலாளரும் அவ்வாறு செயல்பட்டார். மே தினத்தில் ஒரே மேடையில் தோன்றப் போவதாகவும்

# தூர நோக்குள்ள மலையகத் தலைவர்கள்

இன்றைய அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் தந்தையின் தந்தை. தனியார் துறையினரிடம் தோட்டங்கள் திறமாக நிர்வகிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு நன்மையடைவர் என்றெல்லாம் முழங்கினார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்டு அம்மையாரின் அமைச்சரவையில் மூத்த அமைச்சராகப் பதவி வகித்தார்.

பெருந்தோட்டத்துறை தனியார் கைகளுக்கு மாறியது முதலாளிமார் சம்மேளனம் அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியது தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைக்கப்பட்டன. வாழ்க்கைச்செலவு நாளுக்கு நாள் கூடி வந்தது. அமைச்சர் தொண்டமான் அவரது வாரிசுக்கு முடிசூட்டிவிட்டு மறைந்து விட்டார். அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மலையகத் தொழிற்சங்க



வரலாற்றில் ஆற்றிய சேவை என்ன என்பதை பூதக்கண்ணாடியுடன் உதவியுடன் பழைய பத்திரிகைகளையும், தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளையும் தேடித் தேடிப்பார்த்தாலும் கண்டு பிடிப்பது பெரும் கஷ்டமாகவே இருக்கிறது. இத்தகைய காரணங்கள் இ. தொ. கா. அதிருப்தியாளர்களை வெளியேறச் செய்தது. அதிருப்தியாளர்கள் இ. தொ. கா. வின் கணக்கு வழக்குகள் பற்றிப் பேசினார்கள். ஆனால் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கு முன்னிருந்து சொந்த பந்தங்களையும் இப்பொழுதுள்ள விபரங்களையும்



இவர்களுடன் கொள்கையைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இவர்களனைவரும் தமக்கு எது நன்மை பயக்கும் என்ற தூர நோக்குடன் செயல்படுபவர்கள். ஆளும் வரிசையிலிருந்தாலும் சரி எதிரணியிலிருந்தாலும் ஒன்றுதான். ஆளும் அணியில் இருந்தால் சில வசதிகள் கூடும். எதிரணியில் இருந்தால் குறையும் அவ்வளவு தான். ஆனால் இவர்களைப் பார்த்துக் கொண்டிராமல் தோட்டத் துறை யில் இளம் தலைமுறைகள் தூர நோக்குடன் செயல்படா விட்டால் தூர நோக்குடைய தலைவர்கள் இம் மக்களை வெகு தூரத்திற்கே தள்ளி விடுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

என்று கூறி மீண்டும் ஆட்சி மலர, சாதாரண தொழிலாளர் விவசாயிகளின் பிள்ளைகளை போர் முனைக்கனுப்பி அவர்களைப் பலிகொடுத்து வந்தது. அதற்காக நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியை செலவு செய்து வந்தது.

இதன் காரணமாக ரூபாவின் பெறுமதியைப் பல முறை குறைத்து, இதன் விளைவாக வாழ்க்கைச் சுமை நாளுக்கு நாள் கூடியது. இதன் விளைவாக தொழிலாளர் வர்க்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் வெடித்துக்கிளம்பும் என எதிர்பார்த்தனர். இதனால்

வகைகளைச் சிந்தித்தன. தேர்தலின் போது மறைந்த மலையகத் தலைவர் தொண்டமான் தலைமையில் உருவாகிய இந்திய வம்சாவழிப் பேரவை அவர்களுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும். அந்தப் பேரவைப் பிரச்சினைகள் நீதி மன்றம் வரை போய் விட்டது. அதனால் இன்றைய அமைச்சர் தொண்டமானுக்கு மகாத்மா காந்தியும் சத்தியாக்கிரகமும் கைகொடுத்து உதவின. ஏனெனில் அவர் நானூறு ரூபாய் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப் போவதாகக் கூற முதலாளிமார் சம்மேளனம் கூட்டு ஒப்பந்தத்தின் பின் அதற்கு எதிராகச் செயல்பட்டால் நீதி மன்றம் செல்வதாக அறிவித்தது. அவசரகாலச் சட்டத்திற்கு கையை உயர்த்திய இவர்கள் சட்ட நீதியாகச் செயல்படச் சிந்தித்து சத்தியாக்கிரகப் பேராட்டத்தை அறிவித்தனர். தொழிலாளர்களும் அணி திரண்டனர். தொடர்ச்சியாக 24 நாள் போராட்டம் நீடித்து களைத்துப் போன நிலையில் இலக்க ஜாலங்களைக் காட்டி சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டனர். தொழிலாளர்களுக்கு கிடைத்தது பெப்ரவரி மார்ச் மாதச் சம்பளத்தில் வெட்டு விழுந்தது மட்டுமே.

ஆனால் மலையகத் தலைமைகள் எல்லாம் மக்கள் அளித்த ஆதரவை வாயாரப் புகழ்ந்தனர். ஆனால்

செய்திகள் வெளிவந்தன. அதிருப்திக் குழுவினர் தனியாக மேதின விழா நடத்தினர். இந்தியப் பேரவைக்கு உரிமை கூறும் தலைவரும் வேறாக மேதின விழா எடுத்து தொழிலாளர் ஐக்கியம் பேசியிருக்கின்றனர்.

இவர்களனைவருக்கும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருப்பதோ, பொதுஜன முன்னணியில் இருப்பதோ ஒரு பெரிய பிரச்சினையல்ல. ஏனெனில் கொள்கையளவில் இரண்டும் ஒன்றே. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலுள்ள கூட்டமா அல்லது அம்மையாரின் தலைமையிலுள்ள கூட்டமா வெல்லும் என்பதைப் புரிந்து கொண்டால் அதற்கேற்றவாறு செயல்படுவார்கள். இவர்களுடன் கொள்கையைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இவர்களனைவரும் தமக்கு எது நன்மை பயக்கும் என்ற தூர நோக்குடன் செயல்படுபவர்கள். ஆளும் வரிசையிலிருந்தாலும் சரி எதிரணியிலிருந்தாலும் ஒன்றுதான். ஆளும் அணியில் இருந்தால் சில வசதிகள் கூடும், எதிரணியிலிருந்தால் குறையும் அவ்வளவுதான். ஆனால் இவர்களைப் பார்த்துக் கொண்டிராமல் தோட்டத் துறையில் இளம் தலைமுறைகள் தூர நோக்குடன் செயல்படாவிட்டால் தூர நோக்குடைய தலைவர்கள் இம் மக்களை வெகு தூரத்திற்கே தள்ளி விடுவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.



கம்பன் கழக விழாவில்...

www.padippakam.com



# இலங்கை முஸ்லீம்களின் எதிர்காலம்?

இலங்கை வாழ் முஸ்லிம்கள் தேசத்தின் பக்தர்களாய், தேசிய ஒருமைப்பாட்டுக்கோர் இணைப்புப் பாலமாய் திகழும் ஓர் உன்னத சமுதாயம் என்பதற்கு இந்நாட்டு முஸ்லீம்களின் வீர வரலாறுகள் இன்றும் சான்று பகர்கின்றன. இத்தகு வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களான முஸ்லீம்கள் நாளுக்கு நாள் இன்னல்களையும் அழிவுகளையும் அவ்வப்போது அனுபவிக்கக்கூடிய ஒரு பயங்கர சூழல் இந்நாட்டிலே உருவாகி இருப்பது வேதனையான விடயமாகும். காத்தான்குடி பள்ளிவாசலிலே இறைவனை துதி செய்து கொண்டிருந்த அப்பாவிகள் பள்ளிவாசலுக்குள்ளேயே படுகொலை. பொலன்னறுவை பள்ளியகொல்ல. அக்பர்புரம் கிராமத்திலே பால் மனம் மாறா பச்சிளங் குழந்தைகள் தன் வாரிசு உலகைக்காணும் நாளை உவகையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட அப்பாவி முஸ்லீம்கள் கோரக் கொலை இந்த இரத்த வரலாற்றின் புதிய அத்தியாயமாய் இன்று மாவனல்லையிலே முஸ்லீம்களின் சொத்துக்கள் பாதுகாப்புத் தரப்பினரின் பூரண அனுசரணையுடன் அழிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாளைய முஸ்லீம்களின் நிலை என்னவோ எனும் கேள்விக்குறியோடு முஸ்லீம்கள் வாழும் சூழல் ஒன்றுக்கான அத்தியாயம் புரட்டப்பட்டுள்ளது.

**மாவனல்லையில் நடந்த துரதிஷ்டமான சம்பவம் உண்மையில் இதுதான்.**

சிறுபான்மையினரின்- உரிமைகளை என்றும் காப்போம் என்ற வீர முழக்கத்துடன் பதவிக்கு வந்த இந்த பொதுஜன முன்னணி அரசின் அமைச்சரான மஹாபால ஹேரத்தின் கையாட்களான பிரியந்த, சமன், மில்லகொட உட்பட பாதாள கோஷ்டியினர் கடந்த 30.04.01 இரவு 9.30 மணிககு மாவனலல பஸதா்பபிடத்துக்கு அருகிலுள்ள "சாஹாரா" ஹோட்டலில் கப்பம் கேட்டு சென்றுள்ளனர். கப்பம் கொடுக்க மறுத்த முஸ்லிம் நபரை வெளியே இழுத்து அங்குள்ள பிரேமதாஸ சிலையிலே அவரைக் கட்டி தாக்கி, அவரது வாயை வெட்டியுள்ளனர். இத்தாக்குதல் சம்பந்தமாக மாவனல்லை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும் அரசியல் பலத்தின் காரணமாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க மறுத்துள்ளனர். இதன் காரணமாக முஸ்லிம்கள் தமது எதிர்ப்பை ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டுள்ளனர். இந்நிலையில் நீதியை ஒழுங்கை காக்க வேண்டிய பொலிஸார் அநீதியான முறையில் முஸ்லீம்களைத் தாக்கியுள்ளனர்.

**இதுவே மாவனல்லை வன்முறையின் ஆரம்பம்**

அநியாயமாக பட்டப்பகலிலே சொத்துக்களை முஸ்லிம்கள் இழந்து நிற்கும் இந்நிலையில் மரத்திலிருந்து விழுந்தவனை மாடு மிதித்த கதையாக எங்கள் சமூகத்துக்கேற்பட்டுள்ள அநீதிகள் தான் இரத்தக் கண்ணீரை ஊற்றெடுக்கச் செய்கிறது.

❖ வெட்ட வெளியில், பட்டப்பகலில் முஸ்லிம்களின் சொத்துக்களை தேடித் தேடி அழித்துள்ள இச்சம்பவத்தை தனிப்பட்ட குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் என்று முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்கின்றது அரசாங்கம்.

❖ சமுதாயத்தைக் காக்க வேண்டிய முஸ்லிம் அமைச்சரான பவுசியோ, இச்சம்பவத்தில் நஷ்டமடைந்தது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களே என அறிக்கை வெளியிட்டு (பார்க்க வீரகேசரி 04.05.01) எரியும் நெருப்பிலே பிடுங்கியது லாபம் எனும் தன் சாக்கடை அரசியல் புத்தியை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

❖ ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த வேளையிலே முஸ்லிம்களின் உடைமைகள் மட்டுமல்ல உயிரிலும் மேலான மஸ்ஜித்கள் கூட எரிக்கப்பட்டுள்ளதென்றால் பாதுகாப்புத் தரப்பினர் பக்கச் சார்பானவர்கள் எனும் நியாயமான சந்தேகம் முஸ்லிம்களுக்கு மத்தியில் உருவெடுத்துள்ளது.

❖ இச் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் முகமாக கோடிக்கணக்கான உடைமைகளை சேதமாக்கியதன் மூலம் இந்நாட்டில் தமிழ் பேசும் தமிழன் மட்டுமல்ல தமிழ் பேசும் முஸ்லிம் கூட தலை குனிந்து தான் வாழ வேண்டும் எனும் அபாய ஒலியை எழுப்பிய இம் மாவனல்லை சம்பவத்தின் சூத்திரதாரிகள் எவருமே உடனடியாக கைது செய்யப்படவில்லை. ஆனால் கொழும்பு மருதானை சாஹிரா கல்லூரி பள்ளிவாசலுக்கு அருகில் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து 48 மணித்தியாலத்துக்குள் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் சகோதரர் முஜீபீர் ரஹ்மான் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

❖ பத்திரிகா தர்மத்தை காக்க வேண்டிய பத்திரிகைகள் சில கூட இச்சம்பவத்தின் நிதர்சனத்தையோ இது முழுக்க முழுக்க முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை என்பதையோ ஏனோ காட்ட மறுக்கின்றனர். சில அரச தரப்பு தமிழ் பத்திரிகைகள் கூட ஏனோ தெரியவில்லை முஸ்லிம்கள் பேசும் மொழியும் தமிழ் தான் என்பதையும் முஸ்லிம்களும் இந்நாட்டின் சிறுபான்மை தான் என்பதை மறந்து விட்டன.

❖ ஆப்கானிஸ்தான் தலிபான்களால் பாமியா புத்த சிலை தகர்க்கப்பட்டபோது பெரும்பான்மையினத்தவர்களுடன் சேர்ந்து எதிர்ப்பு ஊர்வலம் செய்த நம்முடைய தலைவர்கள், பெரியார்கள் கூட இந்த அநியாயத்துக்கு எதிராக பகிரங்கமாகக் குரல் கொடுக்க முன் வரவில்லை.

மாவனல்லை நகரை பாதுகாப்பதாக கூறி இப்படு பாதக செயலின் சூத்திரதாரி ஒருவரின் வீட்டு வாசலில் பாதுகாப்பு சாவடி ஒன்று அவசரமாக முளைத்திருப்பதும் குற்றவாளிகளை பாதுகாக்கவா? என்று மாவனல்லை மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

முஸ்லீம் சமூகத்தின் இன்றைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் நம்முடைய அமைச்சர்கள், அரச, எதிர்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், உலமாக்கள் அனைவரும் எங்கோ ஓர் இடத்தில் ஒன்று கூடி ஏகோபித்த குரலில் அந்த அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுத்திருக்க வேண்டும். நோய்க்கு மருந்து கொடுப்பது எவ்வளவு அவசியமோ, நோய் என்னவென்பதை அறிந்து அதற்கேற்ற மருந்தை வழங்குவது அதைவிட அவசியமாய் உள்ளது. மருந்தைத் தேடி அலையும் இத்துர்ப்பாக்கிய காலகட்டத்தில் அந்த பொல்லாத நோயை தலைவலி என்கிறார் ஓர் அமைச்சர். இல்லை, இல்லை இது ஒரு சாதாரண காய்ச்சல் என்கிறார் இன்னொரு எம்பி. அதுவும் இல்லை இது ஒரு வயிற்று வலிதான் என்கிறார் இன்னொரு ஆலம்.

(தொடர்ச்சி பக்கம் 09)




1. **பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றி உங்கள் கருத்து?**

பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் ஒரு நூல் கனத்திலான பெரும்பான்மையே உண்டு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து சில வலதுசாரி அங்கத்தவர்கள் பிரிந்து சென்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையக்கூடும் என நம்பப்படுகிறது. மறுபுறத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரசும், முஸ்லிம் காங்கிரசும் கடும் போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றன. ஆனால் இக்கட்சிகள் ஸ்ரீ. ல. சு. க. யிலுள்ள வலதுசாரிகளை விட்டுப் பிரியப் போவதில்லை ஐ. தே. க. உபதலைவர் கரு ஜயசூரியா ஒரு வலதுசாரி சிங்கள பௌத்த தலைவர். எனவே வலதுசாரிகளை அவர் தன்பக்கம் ஈர்ப்பது சாத்தியமாகலாம். மறுபுறத்தில், தொடரும் கொடிய யுத்தம் மற்றும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்படும். சாதாரணமாக மக்கள் புழுங்கிக் கொண்டிருக்கின்றனர். எனவே "ஹர்த்தால்" போன்ற பரந்துபட்ட மக்கள் போராட்டம், வெடிக்கும் நிலை உண்டு. ஆக, பொதுஜன முன்னணி அரசாங்கம் மத்தளம் போல் வலது மற்றும் இடது பக்கங்களிலிருந்து வரும் தாக்குதல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

2. **ஐ. தே. க. வில் கரு ஜயசூரியவை முன்னிலைக்குக் கொண்டு வருதல் தமிழர்களுக்குச் சாதகமாயிருக்குமா?**

கரு ஜய்சூரிய ஒரு சிங்கள பௌத்தர். அவர் ஆயுதப் படையிலும் சேவை செய்தவர், ஆகையால் இராணுவத்துடன் தொடர்பு உடையவர். அது மட்டுமல்லாமல் சிங்கள உருமையா அமைப்புக்கும் நெருக்கமானவர். விடுதலைப்புலிகள் ஆனையிறவை கைப்பற்றிய போது, காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு உசார் கொடுப்பதற்காக, கொழும்பு மருத்துவமனைக்குச் சென்ற முதல் அரசியல்வாதி.

3. **மாவனல்ல சம்பவம் தொடர்பாக ஜனதா விமுக்தி பெரமுனையின் நிலைப்பாடு பற்றி தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

ஜனதா விமுக்தி பெரமுனை அரசாங்கத்திற்கு எதிராகவும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு எதிராகவும், தமது நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அவர்கள் சிங்கள, முஸ்லிம் இனவாதத்தின் மீது பழி சுமத்துகின்றனர். இது அடக்குபவரையும் அடக்கப்படுபவரையும் ஒரே தராசில் போடும் அச்சொட்டான சந்தர்ப்பவாத நிலைப்பாடாகும்.

4. **ஐ. தே. க. நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கும்போது தமிழ் கட்சிகள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

தமிழ் கட்சிகள் ஒரு மாற்று இடதுசாரி சக்தியைக் கட்டி வளர்ப்பதோடு இடதுசாரி சக்திகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். ஒரு இடதுசாரி நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும். அல்லாவிட்டால் கரு ஜயசூரியாவின் பகடைக்காய்களாக ஆக்கப்படுவர்.

5. **தற்போது அரசு விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ள முயற்சிக்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்குமா?**

பொதுஜன முன்னணி தமிழர் தாயகத்தையோ தமிழர் தேசியத்தையோ ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் பேசுவதற்கு என்ன இருக்கிறது. அதனை ஏற்றுக்கொண்டால் பேச்சுவார்த்தை செய்ய இடமுண்டு.

6. **பழிவாங்கப்பட்ட 131 புகையிரத தொழிலாளர்களை தமிழ் தினசரிகள் விமர்சித்துள்ளன இதைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

புகையிரத தொழிலாளர்கள் ஆத்திரம் அடைந்ததற்கு காரணம் அவர்களது மே மாத வேதனம் வெசாக் பண்டிகைக்கு முன்பாக கொடுப்பதற்கு அரசு சம்மதித்திருந்தது. பின்பு வழங்கவில்லை. எனவே பின்பு நடைபெற்றதற்கு அரசே பொறுப்பு ஏற்க வேண்டும். பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களை தமிழ் தினசரிகள் ஏன் விமர்சிக்க வேண்டும்.

7. **பொதுஜன முன்னணியில் இருக்கும் இடதுசாரி சக்திகள் அரசைவிட்டு வெளியேறுமா?**

இடதுசாரிக் கட்சியிலுள்ள வலதுசாரி பிரிவினர் கரு ஜயசூரியாவுடன் இணையும் நிலைதான் அதிகம் இருக்கிறது. சமாதான பேச்சுவார்த்தையை ஆதரிக்கும் குழுவினர் அரசுடன் தொடர்ந்து இருப்பார்கள்.

8. **மேதினம் வெற்றிகரமாக நடந்துள்ளதாக பலராலும் பேசப்படுகிறது. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

நாங்கள் தொழிலாளர்களின் கொந்தளிப்பு நிலை தொடர்பாக மிக அவதானமாக இருக்கின்றோம். ஏன் என்றால் அது தான் இன்றைய நிலைக்கு முக்கிய திறவு கோல் ஆகும். அடுத்த அரசு எது என்பதை தொழிலாளர் தீர்மானிப்பார்கள். யூலை மாதத்தில் பொதுவேலை நிறுத்தம் ஒன்று வெடிக்கும்.

9. **மாவனல்ல விடயத்தில் அரசு ஏன் மகிபால ஹேரத் மீது நடவடிக்கை எடுக்கவில்லை?**

மகிபால ஹேரத் பேரினவாத முகாமில் மிகவும் பலம் வாய்ந்தவர். சந்திரிகா அவர்களிடம் இருந்து அந்நியப்பட அஞ்சுகிறார். மகிபால ஹேரத் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா அவர்களுக்கு மிக வேண்டியவர்.

10. **அமைச்சர் மங்கள சமரவீரா அதிக வேகமாக அனுமதியின்றி கட்டிய கட்டிடங்களை இடித்து தள்ளி வருகிறார். இதன் உள்நோக்கம் என்ன?**

இது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுக்கு இணங்க நிகழும் நடவடிக்கையாகும். இவர்கள் நகரத்தை துப்பரவு செய்து கூட்டு முதலாளித்துவத்திற்கு தாரைவார்க்க முயல்கின்றனர். இதுதான் பல்தேசிய கம்பனிகளுக்கு தேவைப்படும் நகர அபிவிருத்தியாகும்.




படிப்பகம்

www.padippakam.com



# பெண்களை "அழகுமாயை" யினால் அடிமைப்படுத்தும் கொடிய முதலாளித்துவம்



நயோமி வூல்ப் என்பவர் எழுதிய "அழகுமாயை" (The beauty myth) என்னும் நூலிலே பெண்களுக்கென கட்டுப்பாடுகள் எவையும் இல்லாவிட்டால் உண்மையில் பெண்கள் தக்கனவற்றைத் தெரிவு செய்து கொள்ள முடியுமானால் சமூகம் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதனை இப்புத்தகம் சித்திரிக்கிறது.

பெண்கள் மீது ஏன் தடைகள் விதிக்கப்படுகின்றன? மேலும் அவற்றிற்கான வரையறைகளை தீர்மானிப்பது யார்? அடக்கு முறையாகதும் ஈடேற்ற முடியாததுமான பாத்திரங்களை முதலாளித்துவ சமுதாயம் பெண்கள் மீது திணிக்கிறது. ஒரு பாலியல் சமுதாயத்தில் பெண்கள் சாதாரணமாக செய்யக்கூடிய காரியங்களை செய்யவிடாது தடுக்கப்படுகின்றனர் அல்லது அது கெட்டது என உணரப்படுவதற்கோ அல்லது அதனை செய்வதற்கு முயற்சித்தால் அது கீழ்த்தரமானது என எண்ணும் நிலைக்கோ தள்ளப்படுகின்றனர்.

பெண்களை அடக்கு முறைக்கு ஆளாக்கும் நிலையினால் அழகு தொழில் ஒரு பெரிய லாபமீட்டும் துறையாக விளங்குகிறது. பெண்கள் மத்தியில் தளம்பலான உணர்வுகளை உருவாக்கி அவற்றை பணம் பறிக்க பயன்படுத்தும் இத்தொழிலானது கோடானகோடி டொலர்களை தன் வசமாக்கிக் கொள்கிறது. ஒரு மிக நேர்த்தியான பெண் என்பது போன்ற அடைய முடியாத இலக்குகளை இந்த அழகு மாயை உருவாக்குகின்றது. மிக நேர்த்தியான உடம்பு எனும் அடைய முடியாத முயற்சியில் மிதமிஞ்சிய நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்யும் நிலைக்கு பெண்கள் தள்ளப்படுகின்றனர். ஏனென்றால் விளம்பரம் செய்வோரும் அழகு தொழில் துறையும் அது பெண்களின் மதிப்பையும் உயர்த்தி வாழ்க்கையையும் மேம்படுத்தும் என ஆசை காட்டுகின்றது.

பெண்களை அடக்கு முறைக்கு ஆளாக்கும் நிலையினால் அழகு தொழில் ஒரு பெரிய லாபமீட்டும் துறையாக விளங்குகிறது. பெண்கள் மத்தியில் தளம்பலான உணர்வுகளை உருவாக்கி அவற்றை பணம் பறிக்க பயன்படுத்தும் இத்தொழிலானது கோடானகோடி டொலர்களை தன் வசமாக்கிக் கொள்கிறது. ஒரு மிக நேர்த்தியான பெண் என்பது போன்ற அடைய முடியாத இலக்குகளை இந்த அழகு மாயை உருவாக்-குகின்றது. மிக நேர்த்தியான உடம்பு எனும் அடைய முடியாத முயற்சியில் மிதமிஞ்சிய நேரத்தையும் பணத்-தையும் விரயம் செய்யும் நிலைக்கு பெண்கள் தள்ளப்படுகின்றனர். ஏனென்றால் விளம்பரம் செய்வோரும் அழகு தொழில் துறையும் அது பெண்களின் மதிப்பையும் உயர்த்தி வாழ்க்கையையும் மேம்படுத்தும் என ஆசை காட்டுகின்றது.

நிறை குறைதல் எனும் அம்சம் தான் அழகு தொழிலின் பெரும் பகுதியாகும். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் வோரியா மார்சல் யெனி கிறெய் போன்றோர் பெண்களை உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாக செய்யலாம் என ஆசை வார்த்தைகளைக் கொட்டுகின்றனர் அவ்வாறாக அவர்கள் வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் அதிகளவு வெற்றிகரமாக திகழ்வோர்கள் எனவும் காட்டப்படுகிறது. பாலியல் அடிப்படையிலே அழகு தொழில் அமைந்திருக்கின்றது என்னும் உண்மை பெண்கள் விடுதலை இயக்கம் கொண்டிருந்த பலத்தினூடாக கூர்மை அடைந்ததன் காரணமாக அழகு எனும் மாயையினை நிலைநாட்டுவதற்காக அழகு தொழில் ஈடுபாட்டாளர் ஆரோக்கியம் என்ற வார்த்தை யாலத்தை புகுத்தினர்.

"ஹொலிவுட் அழகுமேனிகள் மேலும் பல பெண்களைத் தூண்டியுள்ளன" எனும் தலைப்பில் அவுஸ்திரேலியாவில் வெளிவரும் "கிறீன் லெவ்ற் வீச்சி" எனும் ஆங்கில சஞ்சிகையில் அலிசன் டெலிற் என்பவர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் நோக்கில் லச்வன் மல்டூலாக் என்பவர் எழுதிய கட்டுரையில் பருமன் காரணமாக 50% வீதத்திற்கு மேற்பட்ட பெண்கள் தமது உடலாரோக்கியம் மீது கூடுதலான சிந்தனை செலுத்த வேண்டியவர்களாய் உள்ளனர்.

ஆனால், மிக நேர்த்தியான உடல் நிறை, உடலமைப்பு சிறந்த ஆரோக்கியத்தைத் தரக் கூடியது என்பவை தொடர்பில் அழகுதரும் தொழில் வெளிக்கொணரும் கருத்துக்கள் பொருத்தமானவையல்ல. மிக நேர்த்தியான உடல் நிறை விடயமானது 1918களில் அமெரிக்க காப்புறுதி நிறுவனங்களினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சரியான நிறைக்குரிய உயரம் கொண்டவர்கள் குறைந்த வயதில் மரணிக்க மாட்டார்கள் என்ற மேலோட்டமான எண்ணத்தில் அவ்வாறானவர்கள் தான் காப்புறுதி நிறுவனங்களுக்கு இலாபகரமானவர்கள் என நோக்கப்பட்டது. இந்த மதிப்பீடானது வைத்திய ஆய்வுக்குட்படுத்தப்பட்டிராதது மட்டுமல்லாமல், கலாசார, சமூக, மற்றும் பொருளாதார காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. நிறை குறைப்புக்கு கோடிக்கணக்கான டொலர்கள் கொண்ட தொழிலானது ஆரோக்கியமற்ற உணவு மற்றும் அப்பியாச முறைகளையே ஊக்குவிக்கிறது. எனவே இந்த வழிமுறையில் நிறையைக் கூட்டக் குறைக்க எடுக்கும் மேற்கொள்ளும் முயற்சிகள், உடல் பருமன் ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக்களைக் காட்டிலும் மோசமானவையாகும். அது தாம் உருவாக்கும் "வேகமான சுழற்சி" பொருட்கள் மற்றும் சேவைகளில் சுற்றிச்சுற்றித் தங்கியிருக்கும் நிலையினை ஊக்குவிக்கிறது. அதனுடைய இலக்கானது அதிகளவு இலாபமே ஒழிய பெண்களின் சுகாதாரம் அல்ல.

வைத்தியத்தொழிற் துறையில் பொதுவாக கூடுதலான நடைமுறை யதார்த்த நிலை காணப்படுகிறது. அது அழகு தொழிலினால் புறந்தள்ளப்படும் பல்வகையான காரணிகளைக் கவனத்தில் கொள்கிறது. நல்ல தேக ஆரோக்கியத்திற்கு முக்கியமானது உடலுறுதியும், நல்ல உணவுமேயொழிய, ஒருவர் மெலிந்து காணப்பட வேண்டும் என்பது அல்ல. முதலாளித்துவ ஊடகத்துறையினால் பிரசாரப்படுத்தப்பட்ட வடிவங்கள் காரணமாக அழகு தொழிலானது அழகு எனும் மாயையினை நீடித்து நிலைக்கச் செய்கிறதே தவிர யதார்த்தத்தைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அது கூடுதலான பொருட்களை விற்பனை செய்ய வேண்டியுள்ளதே!

சற்று கூடிய பருமனான ஒரு பெண் (அளவு 16) ஆரோக்கியமான உணவை உட்கொண்டு வருவதோடு ஒரு "மரதன்" போட்டியில் ஓடலாம். அடுத நேரத்தில் ஒரு குறைந்த பருமனான பெண் (அளவு 8) கூடிய கொழுப்புச் சத்துணவை உட்கொண்டாலும், வீதியால் நடந்து சென்று கொண்டிருக்கையிலேயே இலகுவாக இழைத்து விடலாம்.

நம்பிக்கையுள்ள பெண்கள் தமது வாழ்க்கையில் ஆரோக்கியமாகவும், வெற்றி காண்பவர்களாகவும் திகழலாம். முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள் அழகு என்னும் மாயையினை ஊக்குவித்து வழக்கப்படுத்துவதன் காரணமாக பெண்கள் மத்தியில் தன்னம்பிக்கையீனம் தொடரச் செய்கிறது. அவுஸ்திரேலியாவில் 50% மான பெண்கள் அதிக பருமன் கொண்டவர்களாக இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. அதேவேளை, 100% மான பெண்கள் தாம் கண்ணாடியின் முன் நிற்கும்போது உடலில் ஏதாவது பிசகு இருப்பதாக எண்ணிக் கொள்ளுவதுடன், இனிப்புப் பண்டங்களை சாப்பிடும்போது குற்ற மனப்பான்மை கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பதனை அடித்துக் கூற முடியும். நூற்றாண்டுக் கணக்காக முதலாளித்துவத்தின் கீழ் பெண்கள் பண்டங்கள் போல் கருதப்பட்டு வந்துள்ளனர். அழகு தொழிலானது ஆரோக்கியம் என்ற போர்வையில் வலுச்சேர்த்து நிலை பெறச் செய்கிறது. இவ்வாறாக அழகு தொழிலானது பெரிய இலாபத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறது. அத்தோடு பெண்கள் தாம் ஒவ்வொரு விதத்திலும் அழகானவர்களாகத் திகழ வேண்டும் என்ற அழகு மாயையை ஊட்டியதன் காரணமாக இத்தகைய அழகுத் தன்மை இல்லாதவர்கள் சமுதாயத்தில் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். எனவே இந்தவிடயத்தில் அடிப்படையான சமூக மாற்றங்கள் அவசியம் என்பதை உணர்ந்து கொள்வதில்லை. இலாபத்தை நோக்கமாகக் கொண்டுள்ள நாசகாரக் கும்பல்களின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பலியாகாமல் விடுதலை இயக்கம் உயர்ந்த சிந்தனையை உருவாக்க வேண்டும். இந்த நிலையிலிருந்தே பெண்ணியல்வாதிகள் பெண்கள் விடுதலை இயக்கத்தை மேன்மேலும் கட்டியெழுப்ப வேண்டும்.

நன்றி : Green left Weekly (25.04.2001)

# உலக கோப்பையை விட சாஜா கோப்பை பெறுமதியானதா?

உலகிலே கிரிக்கற் விளையாடும் நாடுகள் அனைத்தினதும் கனவாக உலக கோப்பை திகழ்கிறது. நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கோப்பைக்கான போட்டியில், தாமே வெற்றி பெற வேண்டும் என ஒவ்வொரு நாடும் முயற்சி செய்யும். 1996ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று, இலங்கை அணி அதன் கனவை நனவாக்கியது.

இங்ஙனம் உலகக் கோப்பையை வெற்றி கொண்ட இலங்கை அணி தாயகம் திரும்பியபோது, இலங்கை வீரர்களுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. இலங்கை அணியினர் மீதே அப்போது எல்லோரினதும் கவனமும் இருந்தது.

இவர்கள் கொண்டு வந்த வெற்றிக் கிண்ணம் கூட தேடுவார் அற்ற நிலையில் இருந்தது. மிகப்பெறுமதியான இந்த வில்ஸ் உலகக் கிண்ணம் கிரிக்கற் கட்டுப்பாட்டுச் சபையில் ஏனைய கிண்ணங்களுடன் அடுக்கி வைக்கப்பட்டது.

ARY என்று அழைக்கப்படும் சார்ஜா கிண்ணத்தை இலங்கை கிரிக்கற் சபை ஏன் தலையில் தூக்கி வைத்தது என்பது மூடு மந்திரமாகவே இருக்கிறது.

ARY என்ற நிறுவனமே மேற்படி கிண்ணத்தை வழங்கியுள்ளது. இதற்கு இந்த நிறுவனம் மூன்று தங்க பிஸ்கட்டுகளை உபயோகித்ததாக அறியப்படுகிறது.

ஆனால் கிண்ணத்தில் ஒரு கிலோ கிராம் என பொறிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. சாதாரண உலோகத்தில் செய்யப்பட்டு அதற்கு மேலாக தங்கப் பூச்சு பூசப்பட்டதே உண்மை நிலையாகும். இதை இந்த கம்பனியில் வேலை செய்பவர் கூறியதாக தெரியவருகிறது. இந்த கிண்ணம் மிகவும் பாரமற்றதாக இருக்கிறதாம். ஆனால் கிண்ணத்தின் அடியில் பாரமான மரத்துண்டு ஒன்று உள்ளதாம். அந்த மரத்துண்டே இந்தக் கிண்ணத்திற்கு பாரத்தை கொடுக்கிறதாகத் தெரிய வருகிறது. சார்ஜா கோப்பையை இலங்கை அணி வென்ற பின் தாயகம் திரும்பிய போது, இலங்கை வீரர்களை எவரும் பெரிதுபடுத்தவில்லை. ARY கிண்ணத்தின் மீதே எல்லோரினதும் கவனமும், இருந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகள் கிரிக்கற் வீரர்களை விட மேற்படி ARY கோப்பைக்கே பெரிதாக கொடுக்கப்பட்டது.

மிகக் கடுமையான இராணுவ பாதுகாப்புடன் சார்ஜா கிண்ணம் இராணுவத் தலைமையகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. 1996ல் பெறப்பட்ட உலகக் கிண்ணம் எத்தனையோ நாட்கள் அருச்சுனா ரணதுங்கவின் வீட்டில் இருந்ததாகத் தெரிய வருகிறது. தேடுவார் அற்ற நிலையில் இந்த உலகக் கிண்ணம் இருந்ததாகத் தெரிகிறது. வெறும் தகரத்திற்கு மேலாக தங்கம் பூசப்பட்ட கிண்ணத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைப்பற்றி பலரும் அங்கலாய்க்கின்றனர். இந்த கிண்ணத்திற்கு இவ்வளவு பாதுகாப்பு வழங்க வேண்டும் என பரிந்துரை செய்த புதிய கிரிக்கற் கட்டுப்பாட்டுச் சபையினருக்கு என்ன நடந்துள்ளது என்பதே எல்லோரினதும் கேள்வியாக உள்ளது

நன்றி : லக்விம

படிப்பகம்

# இந்தியத் தேர்தல் முடிவுகள் எதைக் காட்டுகிறது?

மிக கட்டுப்பாடான முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்த இந்திய பொருளாதாரம் இன்று அத்தகைய நிலையில் இல்லை என்றே கூறலாம். உலக மயமாக்கலின் போக்கிற்கு இறுக்கமாக





இருந்த இந்திய கதவுகள் திறந்து விடப்பட்டது. விளைவு லட்சக்கணக்கான உள்ளூர் உற்பத்தியாளர்கள் இருந்த இடம் தெரியாமல் போய் உள்ளனர். விவசாய உற்பத்தியும் மிகப் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதன் விளைவுகளே இந்தியாவில் நடைபெற்ற 5 மாநிலங்களுக்கான தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றது.

மக்கள் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் பாதிப்புக்குள்ளாகும்போது ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிராக தமது முடிவை வழங்குவது சாதாரணமாகும். இதுவே தமிழ் நாட்டு தேர்தல் முடிவின் வெளிப்பாடாகும்.

திராவிடக் கொள்கையில் அதிக பற்று வைத்து இயங்கி வந்த திராவிடக் கட்சிகளான தி. மு. க., அ. தி. மு.க. ஆகிய இரண்டும் அக்கொள்கைகளை காற்றில் பறக்க விட்டுள்ளன. இருந்த போதும் தி. மு. க. நிலை மோசமாக இருந்துள்ளது. மிக நீண்ட காலமாக திராவிடக் கொள்கையில் பற்றுடன் செயற்பட்ட தி. மு. க. கடந்த தேர்தலில் தனது கொள்கைகளை யாவற்றையும் கைவிட்டுவிட்டு பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்தது. மிக நுட்பமாக காய் நகர்த்தலின் மூலம் கடந்த தேர்தலில் அமோக வெற்றியும் ஈட்டியது. இதனால் முஸ்லீம்கள், மற்றும் இடதுசாரிகளின் வலுவான எதிர்ப்பு தி. மு. க. விற்கு எதிராக படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது. இலங்கை தமிழ் மக்களின் விடயத்தில், தி. மு. க. ஏனோ தானோவென்ற நிலைப்பாட்டில் இருந்தமையால், தமிழ் தேசிய வாதிகளின் எதிர்ப்பும் தி. மு. க. விற்கு எதிராகத் திரண்டு வந்தது. தமிழ் மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி அ. தி. மு. க. பக்கம் சாய்ந்ததால் தி. மு. க. வின் நிலை மிக மோசமான நிலைக்குச் சென்றது. இத்தகைய நேரத்தில் கோபால்சாமியின் ம.தி.மு.க. தனித்து போட்டியிட முடிவெடுத்ததும், தி. மு. க. விற்கு கேடாக முடிந்தது. தேர்தல் முடிவுகளின் படி தி, மு. க., ம. தி. மு. க. இணைந்து போட்டியிட்டிருந்தால் 30 தொகுதிகளை தி. மு. க. இழந்திருக்காது எனக் கூறப்படுகின்றது.

மறுபக்கத்தில் அ. தி. மு. க. பக்கம் தமிழ் நாட்டின் தென்பகுதிகள் யாவும் அலையென திரண்டுள்ளது. விவசாய மக்களின் மோசமான வாழ்க்கை நிலை தி. மு. க. வை நன்கு பதம் பார்த்துள்ளது. இடது சாரி சக்திகள் முஸ்லீம்கள் ஆதரவு இம்முறை அ. தி. மு. க. பக்கம் சாய்ந்துள்ளது. அவற்றுடன் தமிழ்மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி என்பனவும் அ. தி. மு. க. வெற்றிக்கு அடித்தளம் இட்டுள்ளன்.

ஜெயலலிதா புரிந்த ஊழல்கள், பற்றிய குற்றச்சாட்டுகள் யாவும் தேர்தல் வெற்றியால் அடிபட்டு போகலாம். மத்தியில் இருக்கும் பாரதீய ஜனதா கூட தி. மு. க. வுடன் தனக்கு இருக்கும் உறவை முடித்துக் கொண்டு அ. தி. மு. க.வுடன் உறவு கொள்ள முயற்சிக்கலாம். இதனால் தி. மு. க. நிலை மோசமான நிலையை அடையும். அ. தி. மு. க. பாரதீய ஜனதா உறவிற்கு துக்ளக் ஆசிரியர் சோ போன்றவர்கள் முழு முயற்சியில் ஈடுபடுவார்கள். இலங்கை தமிழர் விடயம் ஜெயலலிதா பதவிக்கு வந்துள்ளதால், மோசமடையுமா என்ற நிலைக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்தி என்று தன்னைக் காட்டிக் கொள்ளும், பாட்டாளி மக்கள் கட்சி தற்போது, ஜெயலலிதா பக்கம் வலுவான நிலையில் உள்ளது. எனவே பாட்டாளி மக்கள் கட்சியை ஜெயலலிதா இணைத்ததால், அமோக வெற்றியை ஈட்டினார். ம. தி. மு. க. வை தி. மு. க. விரட்டியதால் தி. மு. க. படு தோல்விக் கண்டுள்ளது என்றும் சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே இம்முறை தேர்தலிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றனர்.

மேற்கு வங்காளத்தில் இடதுசாரிகள் தமது நிலையை வலுப்படுத்தியுள்ளனர். பாரதீய ஜனதா, இந்திரா காங்கிரஸ், ஆகிய கட்சிகள் செய்த அனைத்து தந்திரங்களும், தோல்வியையே கொடுத்துள்ளது. பாரதீய ஜனதாவின் ஆபாத்தமான போக்கு பற்றி மேற்கு வங்காள இடதுசாரி தலைவர்கள், மக்களுக்கு திறம்பட விளக்கியுள்ளனர். இடதுசாரி தலைவர்களின் கருத்துக்களின் தாக்கம் மேற்கு வங்காள மக்களை நோக்கி நன்கு சென்றுள்ளது என்றே கூறலாம். உலகிலே மிகப் பெரியதொரு மாநிலமாக விளங்கும் மேற்கு வங்காளத்தில் இடதுசாரி சக்திகள் தொடர்ந்தும் தமது நிலையை வலுப்படுத்தி இருப்பது, ஏகாதிபத்தியவாதிகளுக்கு படுதோல்வியாகும்.

இந்தியா ஒன்றில் சோசலிசத்தை பின்பற்ற வேண்டும், இல்லையேல் காட்டு மிராண்டித்தனத்திற்குச் செல்ல வேண்டும் என் கார்ல் மார்க்ஸ் அன்று கூறியது, இன்றும் சரியாகவே உள்ளது. இந்தியாவில் காட்டு மிராண்டிகளாக கருதப்படக் கூடியவர்கள் இந்து தீவிரவாதிகளே. இவர்களின் அரவணைப்பிலே தான் பாரதீய ஜனதா உள்ளது. முடிவடைந்த தேர்தல் முடிவுகள், பாரதீய ஜனதாவுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. விரைவில் பொருளாதார சிக்கலால் துவண்டு போய் இருக்கும் மக்களின் போராட்டங்கள் பாரதீய ஜனதாவை ஈடாட்டம் காணச் செய்யும்.

தமிழகத்தில் தி. மு. க. இம்முறை முஸ்லீம்களை முக்கியத்துவப்படுத்தாமல், பிரதேச, சாதி ரீதியான கட்சிகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தது. தேர்தல் முடிவுகள் தி. மு. க. வின் முயற்சிக்கு நல்லிடத்தை வழங்கியுள்ளது.

உலகமயமாக்கலின் தாக்கததை உலக நாடுகளில் உள்ளோர் உணரத் தொடங்கியுள்ளனர். உலக முதலாளித்துவத்திற்கு எதிராக மிகப் பிரமாண்டமான போராட்டங்கள், உலகின் பாகங்களிலும் வெடித்துள்ளன. இன்னும் வெடிக்க இருக்கின்றன. இந்திய உப கண்டத்தில் இந்தியாவில் நடக்கும் ஒவ்வொரு அசைவும் அதன் அயல் நாடுகளில் பெரும் தாக்கத்தை கொடுக்கக்கூடியது.

இலங்கையிலும் இதன் தாக்கம் ஆட்சியாளர்களுக்கு புரியத் தொடங்கியுள்ளது. தி. மு. க. புலிகளுக்கு ஆதரவாக இருந்தால், தோற்றது. அ. தி. மு. க. புலிகளுக்கு ஆதரவில்லாமல் இருந்ததால் வென்றது என அரச சார்பு செய்தி ஊடகங்கள் பிதட்டிக் கொண்டு இருக்கின்றன. இது யானையைக் குருடன் பார்த்த கதையாகும். தற்போதைய சூழ்நிலையில், சோனியா காந்தி பதவிக்கு வந்தாலும், இலங்கைத் தமிழர் போராட்டத்தை நினைத்தவுடன் கிள்ளி எறிந்து விடுவார் என்று நினைப்பதும் மூடத்தனமாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது. இதை எந்த அரசியல் சக்தியாலும் அசைக்க முடியாது. தீர்வை வழங்கினால் இந்திய உப கண்டத்தில் அமைதி ஏற்படும். இல்லாது போனால், இந்திய தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தியாக இலங்கைத் தமிழர் விடயம் இடம்பெறும்.

# புகையிரதத் தொழிலாளர்களின் போராட்டம் நீதியானதே

- றெஜி பொன்சகா கூறுகின்றார் -

புகையிரதத் தொழிலாளர்களின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், கடந்த மாதம் 30ம் திகதி அளவில் போக்குவரத்து அமைச்சரை சந்தித்துள்ளனர். தமது தொழிற்சங்கக் கோரிக்கை தொடர்பாகவே இப்பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்துள்ளனர். பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றுள்ளது. பேச்சுவார்த்தையின் இறுதியில் தொழிற்சங்க பிரதிநிதிகள் அமைச்சரிடம் தமது மே மாத வேதனத்தை 4ம் திகதி வழங்கும் படி வேண்டுகோள் விடுத்தனர். இதற்கு அமைச்சர் முகாமையாளருடன் கதைக்கும்படி கூறியுள்ளார். அதே தினத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள், முகாமையாளரைச் சந்தித்துள்ளனர். முகாமையாளர் தன்னாலான முயற்சியை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். இதன் பின் முகாமையாளர் நிரந்தர செயலாளரைச் சந்திக்கும் படி கூறியுள்ளார். 30ம் திகதி தொழிற்சங்கத்தின் செயலாளர் றெஜி பொன்சகா நிரந்தர செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். நிரந்தர செயலாளர் நிதிப்பிரிவில் இருந்து பணம் எடுத்தால் 5ம் திகதிக்கு முன்பு வேதனத்தை வழங்குவோம் என்றுள்ளார். மீண்டும் றெஜி பொன்சகா முகாமையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார். முகாமையாளர் பிரதம கணக்காளருடன் தொடர்பு கொள்ளும்படி கூறியுள்ளார். பிரதம கணக்காளர் 2ம் திகதிக்கு முன்பு வேதனப்பட்டியல் வேலை முடிவடைந்தால் வேதனத்தை 5ம் திகதி வழங்குவதாகக் கூறியுள்ளார். இதன் பின்பு 3ம் திகதி தமது இரத்மலானை வேலைத்தளத்தில் தொழிற் சங்கப்பிரதிநிதிகள் பிரதம மெக்கனிக்கல் அத்தியட்சருடன் வேதன விடயத்தை தெரிவித்துள்ளனர். அத்தியட்சர் 5ம் திகதி வேதனம் வழங்கப்படும் என உறுதி கூறியுள்ளார். 5ம் திகதி விடுமுறை தினமாக இருந்தாலும் தாம் வேதனம் எடுக்க வருவதாகத் தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். 1 மணித்தியாலம் கழிந்த பின்னர், அத்தியட்சகர் தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்து 12ம் திகதி சனிக்கிழமை வேதனம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை நடைபெற்ற காலப்பகுதி முழுவதும் புகையிரத தொழிலாளர் அமைதியாகவே தமது கடமையைச் செய்து வந்துள்ளனர். இக்காலப் பகுதியில் தொழிலாளர் தமக்கு வேதனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், இருந்துள்ளனர். வேதனம் 12ம் திகதி கிடைக்கும் என்ற செய்தி கிடைத்தவுடன் தொழிலாளர் மத்தி யில் கொந்தளிப்பு தோன்றியுள்ளது. இதனால், சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றன.

இதன் பின்னர் மாளிகாவத்தைக்குச் சென்ற பொலிசாரும், இராணுவத்தினரும், அங்கு தொழிலாளரை அமைச்சர் உங்களைச் சந்திக்க வருகின்றார் தயவு செய்து எவல்லோரும் ஒரு இடத்தில் கூடுங்கள் என கூறியுள்ளனர். இதன் பின்பு தொழிலாளர் எல்லோரும் ஒரு பொது இடத்திற்கு வந்துள்ளனர். உடனே தொழிலாளர் அனைவரையும் கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தியுள்ளனர். 25000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதவான், வழக்கை மூன்று மாதங்களுக்கு ஒத்தி வைத்துள்ளார். தற்போது 131 தொழிலாளர்கள் புகையிரத பகுதியால், வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி நிலைமைக்கு புகையிரதப் பகுதியின் உயர் நிர்வாகிகளே பொறுப்பு ஏற்க வேண்டும். தொழிலாளர்கள் பொறுமையாக நடந்து கொண்டபோதும், அவர்களைப் பற்றி விசம பிரசாரங்கள் நடைபெற்றமை கவலைக்குரியதாகும். சில தமிழ் பத்திரிகைகள் தொழிலாளரைப் பற்றி குறைவாக தமது ஆசிரிய தலையங்களில் எழுதியமைக்கு வருந்துகின்றேன்.

www.padippakam.com



ட்ரெஸ்கிய இயக்கம், மிக நீண்ட-காலமாக உலக புரட்சியுடன் இணைந்து தோற்கடிக்கப்பட்டது. இந்த இயக்கம் ஒரு நாட்டில் சோசலிசம் என்ற சித்தாந்-தத்திற்கு எதிராகவும், குறிப்பாக ஒரு நாடோ, ஒரு பிராந்தியமோ, சர்வதேச போராட்டத்தின் மையம் என்ற நிலைப்-பாட்டிற்கு எதிராகவும், இருந்துள்ளது. எவ்வாறாயினும், அண்மைக்காலத்தில், 4வது அகிலத்தின் தத்துவரீதியான ஆக்கங்கள், உலகின் ஒரு பகுதி பற்றிய ஆய்வுக்கே அதிக முக்கி-யத்துவம் கொடுத்து வந்துள்ளது. அது மேற்கு ஐரோப்பாவாக உள்ளது.

இன்றைய உலகில் பாட்டாளிவர்க்க புரட்சி பற்றிய கலந்துரையாடல்கள், ஆரம்பிக்கப்படும்போது, அது ஐரோப்-பிய புரட்சிகர நிகழ்வுகள் பற்றியதாக அமைந்து விடுகிறது. இதற்குரிய காரணம் என்ன? உலகப்புரட்சி பற்றிய சித்தாந்தந்தைக் கொண்டிருந்தும், ட்ரொஸ்கீய ஆய்வானது, ஐரோப்பாவை மையமாகக் கொண்டு ஆழமாக வேரூன்றி இந்த நிரையில் செல்கிறதா?

உலகப்புரட்சி ஒரு யதார்த்த நிகழ்வு. இத்துடன் 20ம் நூற்றாண்டின், வரலாற்றில் மேல் நோக்கி நிற்கிறது. ஆனால் உலகப் பொருளாதாரத்திற்கு சமாந்திரமானது என கருதப்பட வேண்டிய உலகப்புரட்சி சமனற்ற முறையில் வளர்ச்சி கண்டுள்ளது. இன்று வரை சமூகப் புரட்சிகள் ஓரளவு வளர்ச்சி கண்ட நாடுகளான ரூசியா, யூகோஸ்லாவியா, சீனா, வியட்னாம், கியூபா, ஆகிய நாடுகளில் இடம்பெற்றுள்ளது. இப்புரட்சியானது முதலாளித்துவத்தை நீச்குவதற்கான மக்கள் போராட்டமாகும். அவை பெரும்பாலும், அதிகாரவாத சக்திகளால்தான் கடடுப்படுத்தப்பட்டதாகவும், இருக்கலாம். ரூசியாவைத் தவிர இப்புரட்சிகளில் நகர தொழிலாளி வர்க்கத்தைத் தவிர்ந்த ஏனைய சக்திகளே பங்கு கொண்டு இருந்தனர். ரூசியாவில் கூட தொழிலாளி வர்க்கம் முன்னணி பாத்திரத்தை வகித்த-போதும், அது பலம் குறைந்நததாகவே காணப்பட்டது. புரட்சிகர போராட்டங்-களில் பிரதான வடிவங்களும், புரட்சியினூடாக தோற்றுவிக்கப்பட்ட அரசுகளின் பிரதான அம்சங்களும் இவ்வாறான காரணிகளால், கணிசமான அளவு பாதிக்கப்பட்டன. புரட்சிகர மார்சியவாதிகள், அத்தகைய வளர்ச்சி போக்கிற்கான காரணிகளை விளக்குவது, அவசியமாகும். ஆனால் உலகம் புரட்சியின் குறிப்பிட்ட திசை வழி முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது என்பதை எக்காரணம் கொண்டும் கூறக்கூடாது. அவ்வாறாக வியாக்கி-யானம் கூற முற்படுவது. மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ட்ரொஸ்கி, றோசா லக்சம்பேர்க் மற்றும் 3வது அல்லது 4வது அகிலங்களை ஸ்தா-பித்தவர்களை உப்புச் சப்பில்லா-தவர்கள் என கண்டனம் கொடுப்பதற்கு சமமாகும். அவர்கள் எல்லோரும் முன்னேறிய கைத்தொழில் நாடுகளில், குறுகிய கால புரட்சிகர முன்னேற்றங்கள், ஏற்படும் என்ற எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர். ஏகாதிபத்திய நாடுகளில் சோசலிசப் புரட்சி உண்மையில் இடம்பெறும் என்பதில் முற்றாக நம்பிக்கை இல்லாத மேற்குலகத்தில் உள்ள தொழிலாளர் மத்தியில் இருக்கும் எதிர்ப்புரட்சிவாத கருத்துக்களையுடைய சீர்திருத்தவாதிகளின் நிலைப்பாடுகள், நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும். தொழிலாளி வர்க்க அதிகாரவாதிகள் மனதில் சோசலிசப் புரட்சிக்கு எதிரான கருத்துக்கள் இருக்கும். அதற்கு அவர்களது சுயநலமே காரணமாகும். இத்தகையவர்களை இந்நூலில் நான் உள்ளடக்கவில்லை. அதை இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், நடைமுறைச் சாத்தியமற்றதாக இருக்கும். உலகப் புரட்சியானது, குறைந்த அபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஊடாக திசை திருப்பப்பட்ட நிகழ்வு படிப்படியாக முடிவுக்கு வந்துள்ளது என்பதை 4வது அகிலம் உறுதியாக நம்புகிறது. அதன் போக்கு பொதுவேலை நிறுத்தம் மற்றும் 1968 மே மாதத்தில் பிரான்சில் இடம் பெற்ற மிகப்பெரிய நெருக்கடியுடன் அதன் போக்கு நிச்சயமாக மாற்றமடைந்து விட்டது. உலகப்புரட்சி போக்கின் நடவடிக்கையில் நகர பாட்டாளிகள் மென்மேலும் முக்கியமான பாத்திரத்-தினை வகிக்கும், வகிக்கின்றது

ஏனெஸ்ட் மென்டல்



# மேற்குலகின் சோசலிச மூலோபாயம்

என்பதையிட்டு, நாம் மிக உறுதியாக உள்ளோம். இந்த் நிலையினை வெறு-மனே ஒரு பூகோள ரீதியான முடிவு என்று எண்ணக் கூடாது. மிக வளர்ச்சி அடைந்த கைத்தொழில் ஏகாதிபத்திய நாடுகளில் தான் புரட்சிகர வெடிப்புகள் அல்லது கொந்தளிப்புகள் ஏற்படும் என்பதல்ல. எத்தனையோ அரைக் காலனித்துவ நாடுகளிலும் பல அதிகார வர்க்க தொழிலாளர் அரசுகளிலும் பாட்டாளிவர்க்கம்தான் தற்போது துடிப்பாக காணப்படும் பெரும்பான்மையான மக்கள் என்ற அளவுக்கு விழிப்புற்று விட்டது. எனவே இந்த தொழிலாளிவர்க்கம் அபிவிருத்தி குன்றிய நாடுகளிலும், தொழிலாளர் அரசுகளில் அதிகார வர்க்கத்திற்கு எதிரான அரசியல் புரட்சிகளிலும் இருந்து எழக்கூடிய நிரந்தரப் புரட்சியில் பிரதான போராளிகளாக விளங்குவர். நகரப்புறத் தொழிலாளி வர்க்கத்தினை, பிரதானமாக மையங் கொண்டுள்ள சமூக புரட்சிகளின் அம்சங்கள் அபி-விருத்தி குறைந்த நாடுகளில் எழும் புரட்சிகளிலிருந்து வெகுவாக வேறுபட்-டிருக்கும். இத்தகைய அம்சங்களை ஆராயும் பொழுது நாம் வெறுமனே யூகிப்பிலிருந்து செயற்படுவதை விடுத்து உண்மையான வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும். இன்றுவரை அத்தகைய புரட்சிகள் தோல்வி கண்டிருந்தாலும் கூட பொதுவாக ஐரோப்பாவிலேயே இடம் பெற்றுள்ளன. 1970களின் முற்பகுதியில் சிலியில் இடம்பெற்ற அனுபவம்தான் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது. எனவே புரட்சிகர மூலோபாயத்தினை ஆராயும் போது, மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு, பொருத்திப்பார்த்தல் என்பது ஐரோப்பிய மையம் என்பதற்கு பலியாக வேண்டும் என்பதல்ல. மாறாக ஆராய்வினை கெட்டியதானாக செய்ய-முடியுமோ அங்ஙனம் பலமுடையதாக செய்ய வேண்டும்.

நகர்ப்புறத் தொழிலாளி வர்க்கம் புரட்சியின் வரலாற்று ரீதியான, ஆய்வு கூடம் எனக் கருதப்படுவது ஐரோப்-பாவாகவே விளங்குவதுடன், யதார்த்த நிலமைகளும், தொழிலாளி வர்க்-கத்தின் உணர்வு நிலையின் மட்டமும், ஐரோப்பாவிலேயே அதுவும் குறிப்பாக தென்மேற்கு ஐரோப்பாவிலேயே, சோசலிச புரட்சிக்கான அனுகூலம் உடனடியாக காணப்படுகிறது. இக்காரணத்திற்காகவே, அண்மைக்காலத்தில் 4வது அகிலத்தின் சித்தார்த்த ரீதியான ஆய்வுகள் ஐரோப்பாவில் மையமாக மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் எமது ஆய்வும் அதன் அடிப்படையில் பெறப்படும் மூலோபாயமும், ஐரோப்பாவுக்கு மட்டுமல்ல, வட அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் கூடுதலான தொழில் மயப்பட்ட அபிவி-ருத்தி குன்றிய நாடுகளான பிரேசில், ஆஜன்டீனா, மெக்சிக்கோ, தென்-கொறியா போன்ற நாடுகளுக்கும் பொருந்தும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் காலத்தில், முக்கியத்-துவம் வாய்ந்த தொழிலாளர் புரட்சிகள் ஐரோப்பியாவில் மட்டுமல்ல அதற்கு வெளியேயும் இடம்பெறும் என்பதை நாம் திடமாக நம்புகிறோம். இந்தவகையில், ஐரோப்பாவை முன்நிலைப்படுத்தி புரட்சி மூலோபாயம் பற்றி ஆராய்வது நிச்சயமாக ஐரோப்பிய மையம் என்று இனம் காண்பதற்கு இல்லை. ஏனென்-றால், அதன் நோக்கமானது, உலகில் ஏனைய பகுதிகளுக்கும் அத்தியா-வசியம் எனக் கருதக்கூடிய வகையில் போராட்டத்திற்கான வேலைத்திட்-டத்தின் செழுமைபடுத்துவதே இதன் நோக்கமாகும். அந்த மூலோபாயம் ஆனது விஞ்ஞான ரீதியாக இருக்க வேண்டுமானால் அதாவது உண்மை-யான அனுபவத்தை கொண்டதாக இருக்க வேண்டுமானால், அந்த ஆய்-வானது யதார்த்தமானதாக இருத்தல் வேண்டும். ஆகையால்தான் மேற்கு ஐரோப்பா முன் நிலைப்படுத்தப்பட்டது.

( 06ம் பக்கத் தொடர்ச்சி )

## இலங்கை முஸ்லீம்களின் எதிர்காலம்?

இந்நிலையில் எதமது சமூகத்தின் விடிவை இந்தத் தலைவர்களின் காலடிகளில் அடகு வைப்பதில் இனியும் பிரயோசனம் இல்லை என்பதை அழுத்தம் திருத்தத்தோடு, அதேவேளை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

### இறுதியாக உறுதியாக நாம் தெரிவிப்பது இதுதான்

"ஏய்! முஸ்லிம் சமூகமே, உன் விலை என்ன?" என்று கேட்கும் அளவுக்கு நாங்-கள் கேவலமாய் போய்விட்டோமென்றால் அதற்குக் காரணம் நம்முடைய தலை-வர்கள் பலரின் சுயநல போக்குகளாகும். எனவே, எமது சமூக விடிவிற்காக நாம் சிந்திக்கும் காலம் வந்து விட்டது. அதற்-கான சரியான தலைமைத்துவத்தை தேடும் பணி இன்றே, இப்பொழுதே ஆரம்-பிக்கப்பட வேண்டும். இல்லாவிடின் எங்க-ளுடைய இன்றைய தலைவர்களாவது, உலக ஆதாயங்களுக்காக இந்தத் தற்-காலிக வாழ்வுக்காக, எம் சமூக நலனில் அக்கறை கொள்ளாமல் இருக்கும் நிலையை மாற்றிக் கொண்டு, தங்கள் பட்டம் பதவியை சமூகத்தின் விடிவுக்காக பாவிப்பவர்களாக மாற வேண்டும்.

எமதருமைச் சிங்கள சகோதரர்-களுக்கும் ஒரு செய்தியை முஸ்லிம்கள் சார்பில் விடுப்பது கடமை எனக் கருது-கிறோம். சிங்கள நண்பர்களே! முஸ்லீம்க-ளாகிய நாம் இந்நாட்டின் நன்றியுள்ள பிரஜைகள், என்பதை நீங்களும் அறி-வீர்கள். உங்களில் பெரும்பான்மையான-வர்கள் கூட இனவாதத்தை ஆதரிக்காத-வர்கள் என்பதை முஸ்லீம்கள் அறிந்து வைத்துள்ளார்கள். சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளை இந்நாட்டு சிங்கள மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் நிராகரித்ததன் மூலம் இனவாதத்துக்கு அவர்கள் துணைபோகாதவர்கள் என்-பதை நிருபித்தார்கள். இந்நாட்டிலே சிங்கள தமிழ், முஸ்லீம் கிறிஸ்தவ சமூகம் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. அதற்காக சிங்கள சமூகத்தின் உறவை நாம் வேண்டி நிற்கிறோம்.

### அன்புற்ற இஸ்லாமிய உடன் பிறப்புக்களே!

முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்காகவும் சிங்கள தமிழ், முஸ்லிம் கிறிஸ்தவ ஐக்கியத்துக்காகவும் எம்மை நாங்கள் தயார்படுத்திக் கொள்வோமாக!

யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்-லீம்களையும் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாப்பாயாக! இலங்கைத் திருநாட்-டிலே நிலையான சமாதானத்தை ஏற்-படுத்துவாயாக!

விசுவாசிகளே! நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து (குர்ஆனாகிய) அல்லாஹ்-வின் கயிற்றை பலமாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் தனித்தனியாகி விடாதீர்கள் (அல்குர்ஆன்)

இவ்வண்ணம்

இலங்கையரின் நலனில் நாட்டம் கொண்டுள்ள கொழும்பு வாழ் முஸ்லீம்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# ஐந்தில் வளையாதது

-அமுதா-




அன்று அதிகாலை 2.00 மணியிலிருந்து யாழ் நகரில் எவரும் நித்திரை கொண்டிருக்க மாட்டார்கள். அவ்வளவு தூரத்திற்கு யாழ் கரையோரப் பகுதியில் செல் வீச்சுக்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், இராணுவ வண்டிகளின் இரைச்சல்களும் யாழ் நகரத்தை அதிரவைத்துக் கொண்டிருந்தன. பொழுது புலர்ந்ததும் இராணுவ வண்டிகளின் போக்குவரத்தும் மிரட்சியுடன் ஓட்டமும் நடையுமாக செல்லும் பொதுமக்களும் துவிச்சக்கர வண்டிகளில் பொதிகளைக் கட்டிக் கொண்டு செல்லும் இளைஞர்களும், வீதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். சந்திகளில் உள்ள படையினரின் சோதனை முகாம்களில் நின்ற இராணுவத்தினர் கோபம் நிறைந்த முறைப்புடன், மக்களை சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

இவையாவற்றையும் பொருட்படுத்தாத சந்திரா தனது துவிச்சக்கரவண்டியில் மிகவேகமாக வந்து கொண்டிருந்தாள். துவிச்சக்கர வண்டியை அதன் பாதுகாப்பு இடத்தில் நிறுத்திவிட்டு திறப்பை கையில் எடுத்துக் கொண்டு அலுவலகத்திற்குச் சென்றாள். அங்கே வரவுப் புத்தகத்தில் கையெழுத்து இட்டுவிட்டு பில்ற்ரரில் ஒரு கோப்பை நீரை எடுத்து அண்ணாந்து இரண்டு மூன்று தரமாக மென்று விழுங்கினாள். பின்பு மின் விசிறியை மிக வேகமாக சுழல விட்டு தனது இருக்கையில் அமர்ந்தாள். அவ் அலுவலகத்தில் ஏற்கனவே வந்து இருந்த சில உத்தியோகத்தரில் ஒருவரான மனோகரன் என்ன சந்திரா புதினம் என்றார். கிட்ட வாரும் சொல்லுகிறேன் என்றாள் சந்திரா. சந்திராவின் நளினமான பதிலைக் கேட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் கொல் எனச் சிரித்தனர். சிரிப்பு அடங்கியவுடன் இன்னொரு உத்தியோகத்தரான இராஜேந்திரன் என்ன மனோ சந்திரா உம்முடன் கடுகடுப்பாக இருக்கிறா என்றார். சந்திராவின் கடுகடுப்புக்கு மறுமொழி சொல்லுவேன் என்னத்திற்கு என்றார் மனோகரன். உடனே சந்திரா இராஜேந்திரன் மனோகரனை என்னைக் கலியாணம் பண்ணச் சொல்லி முன்பு கேட்டனாங்கள். அவர் நான் வடிவு இல்லையென்று மறுத்துவிட்டார். உதுதான் மனோகரன் சொல்ல வந்தது என்றாள். மீண்டும் அந்த அலுவலகம் சிரிப்பொலியால் அதிர்ந்தது.

சந்திராவின் அலுவலகம் யாழ் செயலகத்தில் புனர்வாழ்வு புனரமைப்புக்குப் பொறுப்பானது. தினமும் ஏராளமான பொதுமக்கள் வந்து போவது வழக்கமாகும். காலை 10.00 மணிக்கு பின்பே அலுவலகத்தில் வேலை சூடு பிடிக்கும். அதுவரை சந்திரா, மனோகரன், இராஜேந்திரன் போன்றவர்களின் அரட்டையால் அலுவலகம் கலகலக்கும். சந்திரா நடைபெறும் யுத்தத்தில் கணவனைப் பறிகொடுத்தவள். இது நடந்து இருபத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன. சந்திராவுக்கு ஒரு பெண்பிள்ளை இருப்பது என்பது ஒரு சிலருக்கே தெரியும். தனக்கு ஒரு பிள்ளை இருப்பதை மறைத்தே வந்தாள். சந்திராவின் நெருங்கியவரைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. சந்திரா இப்பொழுதும் தன்னை எல்லோரும் செல்வியாக நினைக்க வேண்டுமென்றே விரும்பினாள். திருமதி என்பது சந்திராவைப் பொறுத்தவரை வெறுப்பான ஒரு சொல்லாகவே இருந்தது.

அன்று சந்திராவின் அலுவலகத்தில் மிகவேகமாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவ்வேளையில் சந்திராவிற்கு அவளது வீட்டிலிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அலுவலக உதவியாளர் பாலன் சந்திராவிடம் சென்று உங்களுக்குத் தொலைபேசி அழைப்பு வந்திருக்கின்றது என்றான். சந்திரா எழுந்து சென்று தொலைபேசியை எடுத்தாள். அதிலிருந்து வந்த செய்தியைக் கேட்ட சந்திரா பேயறைந்தவள் போலானாள். தொலைபேசியை வைத்துவிட்டு பில்ற்ரரில் இருந்த தண்ணீரை எடுத்து இரண்டு மூன்றுமுறை அண்ணாந்து மென்றாள். சந்திரா அந்தரத்தில் தண்ணீரைக் குடித்ததால் நீர் சிதறி அவளது சட்டையிலும் சேலையிலும் பட்டுத் தெறித்தது. தனது இருக்கையில் வந்திருந்த சந்திரா சிறிது நேரத்தில் தனது பிரிவு பெரியவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வீட்டிற்கு விரைந்தாள்.

சந்திரா மிகச் செழிப்புடன் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவள். சந்திராவிற்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு. சந்திராவின் தந்தை பாலசுப்பிரமணியம் மிகப் பிரபலியம் பெற்ற ஒரு நிர்வாக அதிகாரி. சந்திரா கடைப்பிள்ளையானபடியால் அளவுக்கதிகமான செல்லத்துடன் வாழ்ந்தாள். படிக்கின்ற காலத்திலேயே பல்வேறுபட்ட துயரத்தைத் தனது குடும்பத்திற்கு ஏற்படுத்தியவள் சந்திரா வளர திருந்தி விடுவாள் என்றெ எல்லோரும் நம்பினர். சந்திராவின் சகோதரர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் பின்பு தொழில் நிமித்தம் பிற இடங்களுக்கும் சென்று விட்டனர். சந்திராவின் தந்தையார் சதா காலமும் கொழும்பில் சீவித்தவர். எப்பாலும் இருந்துவிட்டு யாழ்ப்பாணம் வருவது வழக்கம். இதனால் சந்திராவின் விடயங்களைக் கவனிக்கும் பொறுப்பு தாயார் அன்னபூரணத்திடம் விடப்பட்டது. மூத்தபிள்ளைகள் எதுவித பிரச்சினைகளும் இல்லாமல் வளர்ந்ததால் சந்திராவின் நடவடிக்கைகளில் பெரிய அக்கறை அன்னபூரணம் எடுக்கவில்லை. இதேவேளை சந்திரா உயர் வகுப்புக்கு வந்தவுடன் அவளைப் பற்றிய முறைப்பாடுகளை சகோதரர்கள் பயணத்தால் வரும்பொழுது தாயின் காதில் போடுவதுண்டு. இப்பவும் தாயார் சந்திரா எல்லைமீறிப் போகமாட்டாள் என்றே நம்பினர். ஆனால் சந்திரா தான் விரும்பிய ஒருவனுடன் பதிவுத் திருமணம் செய்து கொண்டு அவனது ஊருக்கே சென்று விட்டாள்.

சந்திராவை அவளது குடும்பம் அத்துடன் தலைமுழுகியது. சந்திராவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பின் சந்திராவின் கணவன் செல் வீச்சுக்குப் பலியானான். கணவன் இறந்தபின் சந்திரா அரசாங்க வேலை ஒன்றுக்கும் சென்றாள். தனது குடும்பம் தன்னைச் சேர்த்து நடாத்தியிருந்தால் தனது கணவன் உயிர் பிரிந்திருக்காதே என்றே அவள் நம்பினாள். தனது குடும்பத்திற்கு பல்வேறு வழிகளில் அவமானங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அடிமனதில் திட சங்கற்பம் பூண்டாள். மனம் போனபடி வாழ்ந்தாள்.

வீட்டிற்கு வந்த சந்திரா கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அங்கே மேசை மீது வெள்ளை காகிதத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றிருந்தது. அதையெடுத்து வாசித்தாள்.

அன்புள்ள அம்மா,

நான் எனக்கு விரும்பியவருடன் செல்கின்றேன் இதையிட்டு நான் எந்தவிதமான மனக்கவலையும் கொள்ளவில்லை. தயவு செய்து என்னைத் தேட வேண்டாம்.

இப்படிக்கு சைலஜா

சந்திரா கடிதத்தை வாசித்தவுடன் "ஓ" என அலறினாள். அவளின் அழுகைச்சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுப் பெண்மணி உடனே வந்துவிட்டார். சந்திரா காலை 10 மணியளவில் உமது வீட்டுக்கு முன்னால் ஒரு கார் வந்து நின்றது. உமது அம்மா பகுதியாட்களாகத்தான் இருக்க வேண்டும். ஒரு பெடியன் உமது வீட்டுக்குள் வந்தான். நான் என்ன விடயம் என்று பார்க்க வந்தபொழுது உமது மகள் சைலஜா ஒரு சிறிய கைப்பையை திறந்து காட்டி மாமி நான் இந்த வீட்டிலிருந்து எதையும் எடுக்கவில்லை. அம்மாவுக்கு கடிதம் எழுதி வைத்துள்ளேன். நான் போய்விட்டு வாறேன். என்று கூறிவிட்டு கிடுகிடுவென நடந்து போய் காரில் ஏறிச் சென்று விட்டாள். இவ்வளத்தையும் கேட்டவுடன் சந்திராவுக்கு தலை சுற்றியது. சற்று நேரம் மௌனமாக இருந்த சந்திரா காளிபோல் துள்ளியெழுந்தாள். பக்கத்துவீட்டுப் பெண்ணிடம் நான் பொலிஸ் நிலையம் போய்விட்டு வருகின்றேன் என்று சொல்லிவிட்டு போவதாற்கு ஆயத்தமானாள். அப்பொழுது அந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி சந்திரா இந்த விடயத்திற்கு பொலிஸ் நிலையம் செல்வதில் பயனில்லை. அவள் அப்படிப் போனதற்கு நீரும் ஒரு காரணம் என்றார். உடனே சந்திராவிற்கு கோபம் தலைக்கு மேலேறி விட்டது. என்ன சொல்லுகிறீர்கள்? இவளை நான் நல்ல பாடசாலையில் படிக்க வைத்தேன். கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தேன். நேற்றுக்கூட ஒரு புதுச்சட்டை வாங்கிக் கொடுத்தனான். வேறு என்ன அவளுக்கு நான் செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள் என்றாள். சந்திரா உமக்கென்ன பயித்தியமா? குழந்தைப் பிள்ளைபோல் கதைக்கிறீர். உமது சகோதரங்கள் இருக்கினம் தானே. பெடியன் உங்களது ஆட்கள் தானே உடனே போய் உமது சகோதரர்களிடம் விடயத்தைச் சொல்லுமேன். இதற்கு சந்திரா நான் ஏன் அவையிட்டே போக வேண்டும். ஊரில் இல்லாத குற்றத்தையா நான் செய்தனான். நான் கலியாணம் முடித்து இருபத்திரண்டு வருடங்கள் ஆகி விட்டன. ஒருமுறை என்றாலும் என்னை வந்து பார்த்தார்களா? இதற்கு அந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி சந்திரா! நான் சொன்னால் நீர் கோவிக்கக்கூடாது. இந்த இருபத்திரண்டு வருடத்தில் நீர் ஒருமுறை என்றாலும் அவர்களைப் போய் பார்த்தீரா? இன்று உமது பிளன்ளை நீர் இருபத்திரண்டு வருடத்திற்கு முன்பு செய்த பிழையே செய்தது. இதற்காக நீர் எவ்வளவு கோபப்டுகின்றீர். எவ்வளவு மனம் நொந்து கண்கலங்கி நிற்கின்றீர்? இதே அளவு கோபம் தான் இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்பு உமது பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சந்திரா! உமது தனிப்பட்ட விடயத்தில் நான் தலையிட உரிமையில்லை. இவ்வளவு காலமும் உம்முடன் பழகிய ஒரு அயலவர் என்ற முறையில் கூறினேன். நான் சொல்லியதில் ஏதும் பிழைகள் இருந்தால் என்னை மன்னித்து விடும் என்று கூறிவிட்டு சென்று விட்டார். சந்திரா வெடுக்கென சயிக்கிளை எடுத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்றாள். அங்கே தனது மகளைக் காணவில்லை என்றும், வீட்டில் பணம், நகை களவாடப்பட்டது என்றும் முறைப்பாடு செய்தாள். சந்தேகத்தை மகளின் காதலன் மீது தெரிவித்திருந்தாள். முறைப்பாட்டை பெற்ற பொலிசார் நாங்கள் எந்த நேரத்திலும் உங்களை அழைப்போம் நீங்கள் வரத் தயாராக இருக்க வேண்டும் என அனுப்பி வைத்தனர். வீட்டிற்கு வந்த சந்திராவிடம் கவலை விசாரிக்க ஒரு சில ஆண்கள் வந்தனர். வந்தவர்களின் சிலருக்கு போதை அதிகமாகவிருந்தது. ஏதோ வாயில் வந்ததை உளறி விட்டுப் போய் விட்டனர். சந்திராவிடம் வருபவர்கள் இரவில் தான் வருவார்கள். இவர்கள் ஏன் வருகிறார்கள். எதற்கு வருகிறார்கள் என்பது அயலில் இருப்பவர்களுக்குக் குழப்பமாகவே இருக்கும். இதனால் சந்திரா அடிக்கடி வீடு மாறுவதுமுண்டு.

அடுத்தநாள் மாலை பொலிஸ் நிலையம் வருமாறு சந்திராவிற்கு அழைப்பு வந்தது. உடனே பொலிஸ் நிலையம் சென்ற சந்திரா அங்கே மகளையும், காதலனையும் கண்டவுடன் செருப்பைக் கழற்றிக் கொண்டு அடிக்க ஓடினாள். இவற்றைக் கவனித்த பெண் பொலிசார் உடனே தடுத்து விட்டனர். பின்பு விசாரணை தொடங்கியது. சைலஜா பொலிசாருக்கு பின்வருமாறு கூறினாள். எனக்கு 22 வயதாகின்றது. நான் எனக்கு விரும்பியவருடன் செல்கிறேன். இதைத் தடுக்கும் உரிமை யாருக்குமில்லை. எனது வீட்டிலிருந்து ஒரு குண்டூசியைக் கூட நான் எடுக்கவில்லை. இதற்கு பக்கத்து வீட்டு மாமி சாட்சி, பொலிசார் சந்திராவிடம் என்ன கூறுகின்றீர்கள் என்று கேட்ட பொழுது எனது வீட்டிலிருந்து நகை, பணம், களவு போயுள்ளது என கூறினாள். உடனே பொலிசார் பக்கத்து வீட்டு பெண்மணியை விசாரணைக்காக கொண்டு வந்தனர். பக்கத்து வீட்டுப் பெண் இந்தப்பிள்ளை அவளின் வீட்டிலிருந்து எதையும் கொண்டு செல்லவில்லை என்று கூறினாள். கைப்பையைக் கூட திறந்த காட்டிவிட்டே சென்றாள். போகும் பொழுது திறப்பை என்னிடமே தந்துவிட்டுச் சென்றாள். பொலிசாருக்கு உண்மை புரியத் தொடங்க சந்திரா நிலை தடுமாறினாள். உடனே பொலிஸ் நிலைய அதிகாரி இவர்கள் 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இவர்களை எங்களால் ஒன்றும் செய்ய முடியாதெனக் கைவிரித்தார். தனது ஆண் நண்பர்கள் மூலம் எவ்வளவோ செல்வாக்கைச் செலுத்தியும் சந்திராவிற்கு இறுதியில் தோல்வியே ஏற்பட்டது.

ஆவேசத்துடன் வீட்டிற்கு வந்த சந்திரா அள்ளி முழுகினாள். பின்பு புதிய ஆடையணிந்து கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கி வந்து சமையல் செய்தாள். தனது ஆண் நண்பர்கள் சிலருக்கு இரவு சாப்பாட்டிற்கு அழைப்பு விடுத்தாள். ஒரு பாத்திரத்தில் சமைத்த உணவுகளில் சிலவற்றை எடுத்துக் கொண்டு போய் பக்கத்து வீட்டு மாமிக்குக் கொடுப்பதற்காக அவவைக் கூப்பிட்டா. சந்திராவையும் உணவுப் பாத்திரத்தையும் பார்த்த பக்கத்து வீட்டுப்பெண் சந்திரா என்ன எல்லாம் முறைமாறி நடக்கிறது. உந்த நிகழ்வுகளில் என்னை சம்பந்தப்படுத்த வேண்டாம், என்று கூறிவிட்டுப் போய்விட்டாள். திரும்பி வந்த சந்திரா வந்திருந்த நண்பர்களுடன் சிரித்து கதைத்து மகிழ்வைக் கொண்டாடினாள். இரவு முழுக்க சந்திரா வீட்டில் சிரிப்பும் கனைப்புமாக இருந்தது.

காலையில் சந்திரா நேரத்துடன் அலுவலகம் சென்றாள். அங்கே தனது இருக்கையில் அமர்ந்து வழமைபோல் இரட்டை அர்த்த பகிடிகளைச் சொல்லிக் கொண்டிருந்தாள். சந்திராவின் சரித்திரத்தை முழுக்க அறிந்த அந்த அலுவலகப் பணியாளர் சந்திராவின் கதைக்கு மறுமொழி சொல்வதைத் தவிர்த்தனர். சற்றுநேரம் கழித்து புதிதாகத் திருமணம் செய்த பாலன் அலுவலகம் வந்தான். அவனைப் பார்த்து சந்திரா என்ன பாலன் உமக்கு மனிசியைப் பிடிக்கவில்லையோ என்று நக்கலாகக் கேட்டாள். அதற்கு ஒன்றும் சொல்லாத பாலன் சற்று தூரம் சென்று, இந்த நாய் இப்ப கூட திருந்தவில்லை என்று மனதுக்குள் சபித்துக் கொண்டு சென்றான். சைலஜா தனது மாமனுக்கு தனக்கு நடந்த துன்பங்கள் ஒவ்வொன்றையும் விபரமாகக் கூறினாள். போதையில் வரும் ஆண் நண்பர்களின் நடவடிக்கை பொறுக்க முடியாமலே தான் வீட்டை விட்டு வெளியேறியதாகவும் கூறினாள். விபரத்தை புரிந்து கொண்ட மாமன் தனது உறவினர்கள் எல்லோரையும் அழைத்து சைலஜாவின் திருமணத்தை ஆடம்பரமின்றி நடத்தி வைத்தார்.

முட்டைக்குள் இருக்கும் கோழிக்குஞ்சு தன்னை இவ்வளவு காலமும் பாதுகாத்த கோதை எப்படி உடைப்பது என்று நினைத்தால் அந்தக் குஞ்சு அவிந்தே செத்துவிடும். உரிய காலத்தில் கொத்தி வெளியே வந்தால் அது சீவிக்க முடியும். சைலஜா உரிய நேரத்தில் எடுத்த முடிவே அவளை சந்திரா போன்ற சமூக விரோதியிடமிருந்து காப்பாற்றியது.

முற்றும்.

(யாவும் கற்பனை)

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் லாபம் தேடினால்! சமாதானம்?

ஜனநாயகம் என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களுக்காக நடத்தப்படும் ஒரு ஆட்சிமுறையாகும். ஆங்கிலேயர் தாம் கைப்பற்றிய நாடுகளை விட்டு நீங்கிய பொழுது அந்த நாடுகளில் வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறையையே விட்டுச் சென்றனர். இவ்வாட்சி முறை ஒலிவர் குரொம்வெல்லின் காலத்திலிருந்து வளர்ந்து வந்த ஒரு ஆட்சி முறையாகும். இதனால் பிரித்தானிய ஆட்சி. முறையை வரையா யாப்பு முறை என்றே கூறுவர். இவ்வாட்சி முறையையும் ஜனநாயக ஆட்சி என்றே அழைக்கின்றனர். இந்த ஜனநாயக முறையில் பெரும்பான்மையினரின் விருப்பு வெறுப்புக்கேற்பவே காரியங்கள் நடத்தப்படுகின்றன என்பது மட்டும் உண்மையே. இதைப் பிரித்தானியர், அயர்லாந்து பிரச்சினையின் காரணமாக இப்பொழுது சிந்திக்கின்றனர். ஏனெனில் பெரும்பான்மையினரின் விருப்புக்கமைய என்று கூறும்பொழுது அந்நாட்டில் வாழும், இன, மத சக்தியால் சிறுபான்மையினரான மக்களின் அபிலாசைகள் மதிக்கப்படுவதோ, அல்லது பொருட்படுத்தப்படுவதோ இல்லை.

இலங்கையை எடுத்துக் கொண்டால் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை, இவ்வாறான காரணங்களால் வளர்ந்து விசுவரூபம் எடுத்துள்ளது. பிரித்தானிய முறையில் சிந்திக்கப்பட்டு வழங்கப்பட்ட கோல்புறூக், டொனமூர், சோல்பரி அரசியலமைப்புகளும் இதற்குச் சான்றாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த பொழுது வழங்கப்பட்ட சோல்பரி அரசியலமைப்பின் கீழேயே டி. எஸ். சேனநாயக்க அரசால் இந்திய வம்சாவளியினரின் குடியுரிமையை பறிக்கக்கூடியதாக இருந்தது. பின்னர் பிரபல இடதுசாரி தலைவரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவினால் வரையப்பட்ட குடியரசு அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக இருந்த 27வது சரத்து நீக்கப்பட்டது பெரும்பான்மையினரின் விருப்பு என்ற அடிப்படையிலாகும். பின்னர் ஜே. ஆர். ஜயவர்த்தனவினால் முன் வைக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆட்சியிலும் இந்நிலையே முன்னெடுக்கப்பட்டது. இதுவும் பெரும்பான்மையினர் விருப்பு என்ற அடிப்படையிலாகும்.

இதன் பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டாலும் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தத்திற்கமைய முக்கிய விடயங்களனைத்தும் மத்திய அரசின் கீழேயே இருந்ததால் சிறுபான்மையினரின் அபிலாசைகள் நிராகரிக்கப்பட்டே இருந்தன. இதன் விளைவாக ஏற்பட்ட யுத்தம் கடந்த 25 ஆண்டுகளாக கொழுந்துவிட்டெரிகிறது. சந்திரிகா பண்டாரநாயக்க தாம் சமாதானத்தைக் கொண்டு வருவதாகக் கூறி முன் வைத்த யோசனைகளின் மீது கருத்தொருமைப்பாட்டைப் பெற மங்கள முனசிங்க விசாரணைக்குழுவினை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பல வருடங்களாக இழுத்தடித்தது. அவர்களை அதாவது பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்தும் நோக்கில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டுமென்ற உரிமைகள் மேலும் கத்தரிக்கப்பட்டன. இதனால் தமிழ் மக்களின் இணக்கத்தைப் பெற முடியவில்லை. இந்த நிலையில் தேர்தலின் மூலம் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள சமாதானத்திற்கான போர் எனக்கூறி பல்லாயிரம் இளைஞர்களை யுத்த முனையிலேயே இந்த அரசாங்கம் பலியிட்டுள்ளது. மேட்டுக் குடியைச் சேர்ந்தவர்கள் எவரும் யுத்த முனையில் இல்லை. சாதாரண ஏழை, தொழிலாளி, விவசாயிகளின் பிள்ளைகளே வறுமையின் காரணமாக இராணுவத்தில் சேர்கின்றனர். ஆனால் யுத்தத்தின் கோரத்தை அனுபவித்த பின் இராணுவத்தை விட்டு ஓடுகின்றனர். இன்று இவர்கள் நாட்டில் பல கொள்ளை, கொலைகளை நடத்தியிருக்கின்றனர். சிலர் அரசியல்வாதிகளின் பாதுகாப்பாளராகவும் சேவை செய்கின்றனர் என செய்திகள் கூறுகின்றன. மறுபுறத்தில் யுத்தச் செலவிற்காக வரிகள் கூட்டப்பட்டு வாழ்க்கைச் சுமை தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. நாட்டில் அமைதியின்மை தலை தூக்கியுள்ளது. அது எந்த நேரத்திலும் வெடித்துக் கிளம்பக் கூடும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் நாடு முழுவதும் அமைதி வருமா என்ற கேள்வி கேட்கின்றனர். ஏங்குகின்றனர். ஆனால் அதிகார வெறி பிடித்தவர்கள் மட்டும் யுத்தத்தைப் பற்றி பேசுகின்றனர். ஆயுதப் போக்குள்ள லாபம் பெறும் அதிகாரிகள் யுத்தத்தில் வெற்றியடைவது பற்றி பேசுகின்றனர். டென்சில் கொப்பேகடுவ போன்றவர்கள் இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது எனக் கூறியுள்ளதை மறந்து விடுகின்றனர்.

> சாதாரண ஏழை. தொழிலாளி. விவசாயிகளின் பிள்ளைகளே வறுமையின் காரணமாக இராணுவத்தில் சேர்கின்றனர். ஆனால் யுத்தத்தின் கோரத்தை அனுபவித்த பின் இராணுவத்தை விட்டு ஓடுகின்றனர். இன்று இவர்கள் நாட்டில் பல கொள்ளை. கொலைகளை நடத்தியிருக்கின்றனர். சிலர் அரசியல்வாதிகளின் பாதுகாப்பாளராகவும் சேவை செய்கின்றனர் என செய்திகள் கூறுகின்றன. மறுபுறத்தில் யுத்தச் செலவிற்காக வரிகள் கூட்டப்பட்டு வாழ்க்கைச் சுமை தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. நாட்டில் அமைதியின்மை தலை தூக்கியுள்ளது. அது எந்த நேரத்திலும் வெடித்துக் கிளம்பக் கூடும்.
>
> இத்தகைய ஒரு சூழ்நிலையில் நாடு முழுவதும் அமைதி வருமா என்ற கேள்வி கேட்கின்றனர். ஏங்குகின்றனர். ஆனால் அதிகார வெறி பிடித்தவர்கள் மட்டும் யுத்தத்தைப் பற்றி பேசகின்றனர். ஆயுதப் போக்குள்ள லாபம் பெறும் அதிகாரிகள் யுத்தத்தில் வெற்றியடைவது பற்றி பேசுகின்றனர். டென்சில் கொப்பேகடுவ போன்றவர்கள் இந்த யுத்தத்தில் வெல்ல முடியாது எனக் கூறியுள்ளதை மறந்து விடுகின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அயர்லாந்து சமாதானம் பற்றியும் அதை அடைய மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் சிந்தித்தல் எமக்கு நன்மை எனக் கருதுகின்றேன்.

1998ம் ஆண்டு ஏப்ரல் 9ம் நாள் இரவு பன்னிரண்டு மணிவரை 400 ஆண்டுகள் கடந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. 1998ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பொழுது பிரதமர் டோனி பிளேயர் ஆற்றிய உரையில் சமாதானம் வேண்டுமாயின் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பது பற்றி விளக்கிய டோனி பிளேயர் தமதுரையில் இந்த சமாதான முயற்சி வெற்றியளித்ததற்கான கௌரவத்தின் சரிஅரைப்பங்கு ஜோன் மேஜரையே சேர வேண்டும் எனக் கூறியது, அங்கு டோனி பிளேயர் உண்மையில் சமாதான நோக்கில் ஜோன் மேஜர் செயல்பட்டார் என்பதை ஒளிவு மறைவில்லாமல் கூறியது மூலம், தாங்கள் இருவருமே இந்த விடயத்தில் அரசியல் லாபம் கருதி செயல்படவில்லை என்பதாகும்.

நானூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த விடயத்தில் இலங்கையைப் போலல்லாது வட அயர்லாந்து கத்தோலிக்கர்களும் தென்பகுதி புரொட்டஸ்தாந்தர்கள் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மோதிக் கொள்வர். அந்த அளவு பகைமை அவர்களுக்கிடையில் இருந்தது.

சொல்டிக் இனம் என அழைகப்பட்ட இவர்களில் 5ம் நூற்றாண்டளவில் கத்தோலிக்கர்கள் 94% புரட்டெஸ்தாந்தர்கள் 4% இருந்தனர். 12ம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தை ஆங்கிலேயர் கைப்பற்றிய முதல் நாளுக்குநாள் நிலைமை தலைகீழாக மாறியது. பிரபுக்களும், அரச குடும்பத்தினரும் தென்பகுதியில் காணிகளை வாங்கியதோடு அக்காணிகளில் விவசாயம் செய்ய ஆங்கிலேயரைக் குடியேற்றினர். இவர்கள் அனைவரும் புரட்டெஸ்தாந்தர்கள். நாளடைவில் இவர்களின் எண்ணிக்கை வளர்ந்து அயர்லாந்து மக்கள் அவர்களது மண்ணிலேயே சிறுபான்மையினர் ஆக்கப்பட்டனர். இதன் காரணமாக ஜரிஸ் மக்கள் ஆங்கிலேயரை ஆக்கிரமிப்பாளர்கள் என அழைத்ததோடு தமது மண்ணின் சுதந்திரத்திற்காக ஜரிஸ் குடியரசுப் படையை நிறுவியதோடு, அதன் அரசியல் பிரிவாக சின்பென் கட்சி செயல்பட்டது. இதைக் கட்டியெழுப்பியவர் ஆதர் கிரபிக் ஆகும். 1916ம் ஆண்டு முதல் சுதந்திரமடையும் வரை ஆங்கிலப் பாராளுமன்றத்தினுள் போராட்டம் நடத்தினர். 1916ம் ஆண்டில் அயர்லாந்து முழுவதும் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. இதை ஈஸ்டர் கிளர்ச்சி என்றழைத்தனர். இக்கிளர்ச்சியை ஆங்கில அரசு காட்டுமிராண்டித்தனமாக அடக்கியதோடு 1919ம் ஆண்டில் அயர்லாந்து கட்சி உறுப்பினர்கள் தமது தனித்துவத்தைப் பிரகடனப்படுத்த 1920ல் ஜரிஸ் மக்கள் தமது விடுதலையைப் பிரகடனப்படுத்தினர். இதன் விளைவாக அயர்லாந்திற்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென பிரித்தானிய பாராளுமன்றம் தீர்மானித்தது. 1922ம் ஆண்டு 26 பிராந்தியங்களுக்கு சுதந்திரம் வழங்கியதோடு 6 பிராந்தியங்களை தொடர்ந்தும் இங்கிலாந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இதை அல்ஸ்டர் பிரதேசம் என அழைத்தனர். அதாவது வட அயர்லாந்தையாகும். வட அயர்லாந்து அல்லது அல்ஸ்டர் பிரதேசம் 14,148 கி. மீ. பரப்புடையதாகும். 1920ம் ஆண்டு அயர்லாந்து மசோதா கைச்சாத்திடப்பட்டதோடு இந்நிலை 1968ம் ஆண்டு வரை நீடித்தது. 1968ம் ஆண்டு வட அயர்லாந்தின் பிரதமர் அயர்லாந்திற்கு பாரபட்சம் காட்டியதன் விளைவாக பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. இதை அடக்குவதற்கு ஆங்கில இராணுவம் அனுப்பப்பட்டதோடு சுதந்திரமடையும் வரை அங்கிருந்தது. 1922ம் ஆண்டு வட அயர்லாந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டதோடு 1973ம் பொதுஜனவாக்கெடுப்பு நடத்தப்பட்டபொழுது கத்தோலிக்கர் அதைப் பகிஷ்கரித்தனர். இருந்தும் அவர்களது ஆட்சி தொடர்ந்தது. 1974ல் 11 பேரைக் கொண்ட ஒரு நிறைவேற்றுக்குழுவை அமைக்க முயற்சித்த பொழுது கத்தோலிக்க டிக்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தின் விளைவாக அம்முயற்சியும் கைவிடப்பட்டது. இக்காரணங்களினால் 1968 - 1987 வரை தொடர்ச்சியானதும் பயங்கரமானதுமான மோதல்கள் ஏற்பட்டன. 1977ம் ஆண்டு மவுண்ட் பேட்டன் பிரபு கொல்லப்பட்டதும், 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதும் இங்கிலாந்தின் அரசியல் களத்தில் எதிரொலிகளாகக் காணப்பட்டன. இவ்வழுத்தங்கள் இங்கிலாந்தை சமாதான முயற்சியிலீடுபடத் தூண்டின. 1994ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் நாள் 25 ஆண்டுகளுக்குப் பிறகு IRA அமைப்பு யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. ஒக்டோபர் மாதமளவில் புரொட்டஸ்தாந்தர்கள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். இதைத் தொடர்ந்து அப்போதைய பிரதமரான ஜோன்மேஜரும் அயர்லாந்துப் பிரதமர் ஜோன் பேர்டனும் 1999ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததும் ஜோன் மேஜர் ஜரிஸ் கொரில்லாக்கள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். ஆனால் இவருக்கு முன் பதவி வகித்த மார்கிரட் தட்சர் ஜரிஸ் கெரில்லாக்களை இராணுவ ரீதியில் தோற்கடிக்க எமது ஜனாதிபதி சந்திரிகாவைப் போலவே முயன்று இறுதியில் அரசியல் களத்திலிருந்து இறக்கப்பட்டார் அல்லது தாமாகவே கன்சர்வேடிக் கட்சிகளின் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.

வரலாற்றில் இன்னுமொரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சின்பென் அமைப்பின் தலைவர் ஜோன் அடம்ஸ் பல்வேறு சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போல பேச்சுவார்த்தையிலிருந்து விலகினாலும் பின்னர் மிகவும் அனுபவமும் ஆழ்ந்த நோக்கமுடையவராக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதை காணக்கூடியதாகவிருந்தது. பேச்சுவார்த்தைக்கு அமர்ந்தபோது அல்ஸ்டர் தேசியக் கட்சியின் தலைவர் டேவிட் அடம்ஸ் ஜெரி அடம்சை ஒரு பயங்கரவாதி என்றதுடன் கைகுலுக்கவும் மறுத்ததை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய ஜெரி அடம்ஸின் பங்களிப்பை டேவிட் ட்ரெம்பல் புகழ்வதையும் வரலாற்றில் மறக்கமுடியாது. ஏனெனில் இவர்களது நோக்கங்களும் இலட்சியமும் ஒன்றானதாலாகும்.

ஜோன் மேஜரின் கன்சர்வேடிவ் கட்சி தேர்தலில் தோல்வியைத் தழுவியதோடு தொழில் கட்சியின் பிரதமராக டோனி பிளேயர் பதவியேற்று பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க முயற்சித்தார். இதற்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் அயர்லாந்துக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா இங்கிலாந்தின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டபோதும் அவை பிரபுக்கள் சபையினால் நிராகரிக்கப்பட்டன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வெற்றி பெற்ற டோனி பிளேயர் ஜோன் மேஜரை விட ஒருபடி முன்னே சென்று ஆயுதங்களை கீழே வைக்கத் தேவையில்லை, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத்தயார் என்று அறிவித்தது மட்டுமல்லாமல், வட அயர்லாந்துப் பொதுக் கூட்டங்களில் ஜோன் மேஜருடன் இணைந்து தாங்கள் அயர்லாந்தின் நண்பர்கள் எனக் கூறி அயர்லாந்து மக்களின் தற்போதைய பிரதமரும், முன்னாள் பிரதமரும் ஒரே மேடையில் ஒன்றாகத் தோன்றி மக்களுக்கு ஆற்றிய உரை நம்பிக்கையை வளர்த்ததோடு ஜரிஸ் கொரில்லாகக்ளும் ஆயுதங்களைக் கைவிட்டனர்.

இச்சமாதான முயற்சியில் இன்று, ஒரு விடயத்தில் மூன்றாவது தரப்பின் பங்குபற்றுதலையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பில் கிளின்டனின் பிரதிநிதியாக அயர்லாந்திற்கும் இங்கிலாந்திற்குமிடையில் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியவர் ஜோன் மிச்சேல். இவர் தொடர்ச்சியாக இம்முயற்சியில் சொல்ஹெயிம் போல் பங்கேற்றினார். இவர் வாரத்தின் இரண்டு நாட்களை அமெரிக்காவிலும் எஞ்சிய நாட்களை இங்கிலாந்திலும் கழித்தவர் ஆவார். தொடர்ந்து .இரண்டு நாட்கள் ஜெரி அடம்பின் கருத்திற்கு செவி மடுத்தார் என்றால் சமாதானத்தூதுவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு உதாரணமாக விளங்கியதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின் ஜோன் பிளேயர் நாட்டிற்கு ஆற்றிய உரையில், இந்த சமாதான உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டதன் கௌரவத்தில் சரி அரைப்பங்கு ஜோன் மேஜர் அவர்களைச் சேரும் என அரசியல் லாபம் கருதாது போற்றியதை இன்று சமாதான நடவடிக்கையில் ஈடுபடும் தலைவர்களும் முன்னுதாரணமாகக் கொண்டால் ஜரிஸ் கொரில்லாக்களின் நடவடிக்கையின் 25ம் ஆண்டில் அங்கு சமாதானம் மலர்ந்தது போல விடுதலைப் புலிகளின் 25ம் ஆண்டில் இங்கும் சமாதானம் மலருமா?

படிப்பகம்

www.padippakam.com

புதிய சமதர்மம்

පුදිය සමධර්ම

PUTHIYA SAMADHARMAM

Registered as a news paper in Sri Lanka



வாசகர்களே!

உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.

தொடர்புகட்கு

ஆசிரியர்

புதிய சமதர்மம்

143/3, கியு வீதி, கொழும்பு-02

தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பாதை எது ?

கடந்த 13ம் தேதி மாலை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சர்வதேச ஊடகவியலாளர் தினம் கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்தில் ஜெகான் பெரேரா, வி. ரி. தமிழ்மாறன், டி. சிவராம் ஆகியோர் முக்கிய உரை நிகழ்த்தினர்.

ஜெகான் பெரேரா உரை ஆங்கிலத்தில் அமைந்தது. இதற்கு மொழிபெயர்ப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை. ஜெகான் பெரேராவின் உரை முடிந்த பின்பு சபையினர் கேள்விகளுக்கு இடம் கொடுக்கப்பட்டது. சபையில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டும் சில கேள்விகளைக் கேட்டனர். வேறு நிகழ்வுகளுக்குப் போகும் போது தமக்கு மொழிபெயர்ப்பு வேணும் என அடம் பிடிக்கும் தமிழ் ஊடகவியலாளர், இங்கு மௌனமாக இருந்ததன் அர்த்தம் என்னவென்று புரியவில்லை. வி. ரி. தமிழ்மாறன், சிவராம் போன்றவர்கள் பல உபயோகமான கருத்துக்களைத் தமது உரையில் வழங்கியிருந்தனர். இவர்களின் பேச்சின் பின்பு புதிய சமதர்மம் பிரதம ஆசிரியர், வி. திருநாவுக்கரசு தென் இலங்கையில் உள்ள முற்போக்கு செய்தியாளர்களுடன், நாம் தொடர்புகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் பல செய்யலாம் என்ற கருத்தை முன் வைத்தார். இக்கருத்தை தலைவர் மாணிக்கவாசகம், சிறு விளக்கத்துடன், மழுப்பி விட்டார்.

சிங்கள செய்தியாளர்கள் தமிழ் செய்தியாளர்களின் நலன்களில் அக்கறை இல்லாததால் தான் தமிழ் செய்தியாளர் ஒன்றியம், ஆரம்பிக்கப்பட்டது என்பதே மாணிக்கவாசகரின் கருத்தாக இருக்கலாம். ஆனாலும் சிங்கள செய்தியாளர்களிலும் பல முற்போக்குத் தன்மை கொண்ட பல செய்தியாளர்கள் உள்ளனர். அவர்களை அடையாளம் கண்டு இணைந்து செயற்படுவதால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கே அதிக வலிமை கிடைக்கும்.

# புகையிரத தொழிலாளர் மீது பழிவாங்கல்

போக்குவரத்து அமைச்சருடன் புகையிரதப்பகுதி தொழிற்சங்க பிரதிநிதிகள். செய்த கலந்துரையாடலின் போது. வெசாக் தினத்தை முன்னிட்டு மே மாத வேதனத்தை முன்னதாக வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கு அமைச்சர் சாதகமான பதிலை கொடுத்துள்ளார். புகையிரத பகுதி நிர்வாகமும். வேதனத்தை தருகின்றேன் என உறுதி கூறியுள்ளது. இறுதியில் முடியாது என கைவிரித்து இருக்கின்றனர்.

வாழ்க்கைச் சுமையை தாங்க முடியாத தொழிலாளர்களுக்கு புகையிரத பகுதி நிர்வாகத்தின் எதேச்சதிகாரமான பதிவால் தொழிலாளர் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டு சில அசம்பாவிதங்கள் நடந்தன.

தொழிலாளரின் மனவேதனை புரியாத போக்குவரத்து அமைச்சர் 131 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளார். இது பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த செயலாகும். வேதனத்தை இழுத்தடித்த நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்காத அமைச்சர். தொழிலாளர்களை பழிவாங்கி உள்ளார். சக தொழிலாளருக்கு வேலை வழங்கக் கோரி ஆயிரத்துக்கும், மேற்பட்ட புகையிரத தொழிலாளர்கள் கடந்த 22.05.2001ம் திகதி மருதானை புகையிரத நிலையம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியல் போராட்டத்தில் யுத்தத்தை நிறுத்து. தனியார் மயமாக்கலை நிறுத்து. ஜனநாயக விரோத சட்டங்களை இனபேதம் எமக்கு வேண்டாம் சட்டங்களை எடு என்றே கோசமிட்டனர்.

இந்த நாட்டில் வளர்ந்துவரும் இனவாதத்தை முறியடிக்கக்கூடிய பலம் தொழிலாளர்களிடையே உண்டு. என்ன கதை கூறினாலும் போக்குவரத்து அமைச்சர் இன்று இனவாதிகளின் செல்லப்பிள்ளையாக உள்ளார். இனவாதிகளைத் திருப்திப்படுத்தவே அமைச்சர் புகையிரத தொழிலாளர்களை பழிவாங்கியுள்ளார்.

யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதில் தொழிலாளர்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். இத்தகைய நேரத்தில் இவர்கள் பழிவாங்கப்பட்டிருப்பது துர் அதிஸ்ட வசமானதாகும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான தொழிலாளர்களை சில தமிழ் தினசரிகள் தரிசித்து இருப்பது அவற்றின் பக்குவமற்ற நிலையை பிரதிபலிக்கிறது. போராட்டக் களத்தில் இருக்கும் புகையிரதத் தொழிலாளருக்கு எமது ஆதரவை தங்கு தடையின்றி வழங்குவோம். அவர்களது வெற்றி எமது வெற்றியாகும்.

# புத்த பெருமானின் வயிறு கிழித்து கொள்ளை

இந்த நாடு பௌத்த நாடு. அரசாங்க மதம் பௌத்த மதம். அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்திற்கு அதி முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. பௌத்த சமயத்திற்கும், கலாச்சாரத்திற்கும் ஆபத்து வரக்கூடாது என்பதற்காக குரல் கொடுக்க எத்தனையோ அமைப்புக்கள் உள்ளன.

இருந்த போதும் உணர்ச்சிமிக்க பௌத்தர்கள் வாழும், கண்டி மாவட்டத்தில் 700 வருடங்கள் பழமை வாய்ந்த புத்த பெருமானின் சிலையின் வயிற்றை குடைந்து புதையல் தேடியுள்ளனர். மிக பழமை வாய்ந்த இப்புத்தர் சிலை சேதம் அடைந்ததையிட்டு, இப்பகுதியில் வாழும் பொது மக்கள், விசனம் அடைந்துள்ளனர்.

தலிபான் அமைப்பினர் ஆப்கானிஸ்தானில் உள்ள புத்தர் சிலைகளை அழித்தபோது உலகமே கண்டித்தது. ஆனாலும் ஆப்கானிஸ்தானில் இஸ்லாம் மதமே உள்ளது. வேற்று மதத்தினரே புத்த பெருமானின் சிலையை உடைத்தனர். ஆனால் இலங்கையில் பௌத்த கொள்கையில் ஊறிப் போனவர்கள் புத்த பெருமானின் சிலையை குடைந்திருப்பது அநியாயமானதாகும்.

பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா ஆப்கானிஸ்தானில் உள்ள, பௌத்த சின்னங்கள் அனைத்தையும் வாங்கப் போவதாக அறிவித்திருந்தார். பிரதமர் அந்நிய நாடுகளில் உள்ள பௌத்த பொக்கிஷங்களை வாங்குவதைவிட இலங்கையில் இருக்கும் புத்தர் சிலைகளை முதலில் காப்பாற்ற வேண்டும்.

தற்போது இலங்கை அரசியலில் கொடிகட்டிப் பறக்க நினைக்கும் சிங்கள உறுமைய்யா, வீரவிதான போன்ற அமைப்புக்கள், தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கக்கூடாது என்பதில் தீவிர அக்கறை காட்டும். இவர்கள், எதிர்காலத்தில் அதைக் கைவிட்டுவிட்டு, நாட்டில் உள்ள புத்த சிலைகளுக்குக் காவல் நின்றால் கூட பிரயோசினமாக இருக்கும். இதை அவர்கள் மீது உள்ள ஆத்திரத்தில் கூறவில்லை. அவர்களுக்கு, சிங்கள மக்கள் மீதும் இருக்கும் பக்தியை நிருபிப்பதற்கு இதைவிட வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி )

# கரு ஜயசூரியா, கருநாகமா?

கருதுவதாக அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இத்திட்டத்திற்கு ஆதரவாக உள்ளவர்கள் தமிழர்கள் பிரச்சினையை ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலிலிருந்து அகற்ற வேண்டும் எனவும் இதற்கு பிரதமர் ரத்னசிறி ஆதரவு உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன எனக் கூறுகின்றன.

மறுபுறத்தில் தினேஸ் குணவர்த்தனின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது எனவும், சிங்கள உருமய், பௌத்த பீடாதிபதிகளின் ஆதரவும் கிடைக்கும் எனவும் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ரணில் ஒஸ்லோ நகரில் இருந்த பொழுது அவரை தலைமைப் பீடத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாக ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்து வேட்டை மேற்கொண்ட ஆவணம் ரணிலின் கைக்குச் சென்று அது இப்பொழுது பெட்டிக்குள் முடங்கி விட்டாலும், இதற்கு தலைமை வகித்த கரு ஜயசூரிய, காமினி அத்துக்கொரளை, வி. ஐ. மு. லொக்கு பண்டார ஆகியோரின் சார்பில், உங்களது தலைமையில் இந்த அரசைப் புரட்ட முடியாது அதற்கு மற்றும் எதிர்க்கட்சிகளின் ஆதரவும் கிடைக்காது ஆகையால் நீங்கள் நீண்ட விடுமுறையில் செல்வது நல்லது என வி. ஐ. மு. லொக்கு பண்டார கூறியதாக மேலும் கூறப்படுகிறது. லொக்கு பண்டார கூறிய எதிர்க்கட்சிகள் சமாதானம் பற்றிப் பேசும் தமிழ்க் கட்சிகளாக இருக்க முடியாது என்றும், அப்படியானால், அவை சிங்கள உருமையாவும், ம. வி. மு. (JVP)யும் இருக்க வேண்டும் எனவும் கருத இடமிருக்கிறது. உண்மையிலேயே இது யுத்தமா, சமாதானமா என்ற விடயமேயாகும். 1971ம் ஆண்டு கிளர்ச்சியை அடக்குவதற்கு இராணுவத்திற்குப் பெரும் ஒத்துழைப்பு வழங்கிய கரு ஜயசூரிய, தொழிற்சங்கங்கள் அவசியமில்லை தமிழ் மக்களுக்கு சமத்துவமளிக்கலாம் ஆனால் சுயாட்சி அளிக்கக்கூடாது என்ற கருத்தைக் கொண்டவராவார்.

இதன் காரணமாக இவரது நடவடிக்கைகளுக்கு தொழிலாளிவர்க்கமும், தமிழ் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குமா என்பது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது.

இப்பத்திரிகை இல.143, கொழும்பு-2ல் வசிக்கும் லீனஸ் ஜயதிலக என்பவரால் கொழும்பு-2 ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியி

படிப்பகம்